# நீரெல்லாம் கங்கை நிலமெல்லாம் காசி!

**''வற்றாத பொற்றாமரைத் தடந்தோய்ந்திடின்
வாராது பின் பிறவி நோய்...''**

பொற்றாமரைக் குளத்துப் படித்துறைச் சுவர் ஒன்றில் நல்ல சிவப்பெழுத்தில் மின்னிக் கொண்டிருந்தன மேற்படி வாசகங்கள்! அதையே உற்றுப் பார்த்துக்கொண்டு உட்கார்த்திருந்தார் சிவப்பிரகாச குருக்கள், மனசுக்குள் உடைத்துக் கொண்ட அணைபோல எண்ணங் கள்! அதன் எதிரொலி யாய் விழியோரமாய் நீர் தேங்கி உள் நினைப்பு முழுவதும் ''சோகம்...சோகம்'' என்றபடி ஒழுகிக் கொண்டிருந்தது.

தலைக்கு முட்டாக்குப் போட்டு முகத்தின் பக்க வாட்டுப்பகுதிகளை மறைத்திருந்தபடியால் அவர் அழுவதை எவரும் உணரவில்லை.

''அம்மா...

உன் சன்னதி தேடி வந்திருக்கேன்.

உன்னைத் தரிசிக்கணும்கற என் ஜென்மதாகம் இன்னிக்குத் தீர்ந்தது. பிரசித்த பெற்ற இந்த பொற்றாமரைக் குளத்துலையும் மூழ்கி எழுந்துட் டேன்! இங்க என்னவோ எழுதியிருக்கே..? ஆங்... இந்த குளத்துல நீராடி உன்னை வழிபட்டவாளுக்குப் பிறவியே கிடையாதாமே! நிஜ மாம்மா?

நிஜம்னா எனக்கு இனி பிறவியே கிடையாது! அப்பாடா! அது தான் எனக்கு வேணும். இந்தப் பிறவியில் நான் படற வேதனை போதும், தாங்க முடியலையம்மா வேதனை... எப்பப் பார் ஓடி...ஓடி... ஒளிஞ்சு, ஒளிஞ்சு... எப்பம்மா எனக்கு விமோசனம்?''

சிவப்பிரகாசம் தன்னுள் தனக்கென வாதப் பிரதிவாதம் செய்து கொண்டிருந்த அந்த அந்தி சந்தியில், கழுகுக்கு நிகரான கூரிய விழி களை உடைய ஒருவர் குளத்தின் மறுமுனை ஒன்றில் நின்றபடி சிவப் பிரகாசத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்! அவருடன் வந்திருந்த பெண்மணி கோபத்தோடு அவரைக் கலைக்கப் பார்த்தாள்.

**இந்திரா சௌந்தரராஜன்**



''என்னங்க இது. கோயிலுக்கு வந்த இடத்துல மரம் மாதிரி நின்னு கிட்டு! இங்கையுமா உங்க போலீஸ் புத்தி? யாரைப் பார்த்தாலும் இவன் அந்தக் குற்றவாளியா இருப்பானோ, இந்தக் குற்றவாளியா இருப்பானோன்னு... சே! வாங்க, சாமி கும்பிடப் போவோம்...''

அவர் தனது தீர்க்கமான பார்வையைக் கலைத்துக் கொண்டு, ''ஒரு நிமிஷம் இரு விசாலம்...'' என்றபடி சிவப்பிரகாசத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

எதேச்சையாக தலையை உயர்த்திய சிவப்பிரகாசத்துக்குத் தன் னையே நோக்கி கன கம்பீரமான ஓர் உருவம் வருவது தெரிந்ததும் தீத் துண்டத்தை கடித்தது போலானது. இதயத் துடிப்புக்கூட தன்னை இரண்டால் பெருக்கிக் கொண்டிருந்தது. உடம்பின் உதிர ஓட்டத்தில் கூட இரட்டை வேகம்! ''சிவா, கிராப்பைப் பார்த்தா போலீஸ் மாதிரி தெரியறது. ஓடு...ஓடு...?'' மூளையில் சிவப்பு விளக்கு எரிந்து எரிந்து அணைந்தது.

சட்டென்று எழுந்து வேகமானார்! மளமளவென்று நடந்த கால்க ளில் ஓட்டம் பிறந்தது. விபூதி பிள்ளையாரைக் கடந்து, கிளிக்கூண் டைத் தாண்டி படியேறி ஆடிவீதிக்கு வந்து தெற்குக் கோபுர வாயி லில் அசுர வேகம் காட்டியது அவர் உடம்பு.

அவரைப் பார்த்துச் சந்தேகித்த அந்தக் கம்பீர மனிதரும் அசர வில்லை. தன்னையும் வேகப்படுத்திக் கொண்டார். தொடர்ந்து ஓடி வந்து கோபுர வாசலுக்கு வெளியே வந்த போது பரபரப்பான ஜன நட மாட்டத்தில் சிவப்பிரகாசத்தைக் காணோம்.

'பாஸ்டர்ட், தப்பிச்சுட்டான்! விடமாட்டேன்டா உன்னை... இந்த மதுரையை விட்டு வெளியே போயிடுவியா நீ' கருவியது மனது. சற் றும் தாமதிக்காமல் பக்கத்து ஜவுளிக் கடைக்குள் நுழைந்து டெலிபோ னைச் சுழற்ற ஆரம்பித்தார் அவர்.

மறு முனையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணன்!

''சரவணன் நான் இன்ஸ்பெக்டர் உமாநாத் பேசறேன். மனைவி யோட மீனாட்சியம்மன் கோவிலுக்கு வந்தேன், வந்த இடத்துல ஒரு கிரிமினல் எதிர்பாராதவிதமா தட்டுப் பட்டான்! சங்கராபுரம் நடராஜர் சிலை திருட்டு விஷயமாகவும், ஆடிட்டர் ஒருத்தர் கொலை சம்பந்த மாகவும், நாம் தேடிக்கிட்டு இருக்கற அர்ச்சகர் சிவப்பிரகாசம்கற நபர் தான் அவன்! என்னைப் பார்த்ததும் ஓடி ஒளிஞ்சுட்டான்.

இந்த நபர் இப்ப மதுரை சிட்டிக்குள்ற தான் இருக்கான். உடனடி யாக வளைக்க ஏற்பாடு செய்யுங்க. நான் இப்ப சார்ஜ்ல இல்லை. குடும் பக் கல்யாண விஷயமா லீவுல இருக்கேன்.''

போனை வைத்துவிட்டுக் கடையைவிட்டு இறங்கித் திரும்பவும் கோயிலுக்குள் நுழைந்தார் உமாநாத் எனும் அந்தப் போலீஸ் அதிகாரி.

தொலைவில், வெகு தொலைவில் வைகை ஆற்றின் மேம்பாலம் மீது முட்டாக்கை விலக்காமல் விரைந்து கொண்டிருந்த சிவகப்பிரகா சத்துக்கு மூச்சு இளைத்தது. வைகையில் மாய்ந்து விடலாமா என்று கூடத் தோன்றியது.

பொறு சிவா! திருடனா, கொலைகாரனா சாகப் போறியா? நீ இப்ப
ஒரு வேள்வின்னா செஞ்சுண்டுருக்கே... இப்படி மாய்ஞ்சு போக
லாமா? நெனைச்சதை மூடி, தற்கொலை பெரிய பாவமில்லையா?
என்னை என்ன பண்ணப்போறே? கோடி கோடி தூப தீபங்களால் தின
மும் ஆராதிக்கப்பட்ட நான் இப்ப மண்ணுக்குள்ள புழுவாகிண்டிருக்
கேனே?' தற்கொலையின் விளிம்புக்கு போனவரை பொறி தட்டினார்ப்
போன்ற சிந்தனை பின்னுக்கிழுக்கவே, தொடர்ந்து பாலத்தின் நடக்க
ஆரம்பித்தார்.

வெளியே இருள் பரவ ஆரம்பித்திருந்தது. பாலத்தின் வளைவின்
முடிவில், போலீஸ் பீட்டில் போக்குவரத்தை ஒரு போலீஸ்காரர் ஒழுங்
குபடுத்திக் கொண்டிருந்தார். முன்னதாக பாலத்தின் வலப் பக்கத்தில்
மீனாட்சிக் கல்லூரியைப் பார்த்த மாதிரியில் ஒரு படிச் சரிவு! வேக
மாக அதில் இறங்கி எங்கே போகிறோம் என்பதே தெரியாதபடி
வைகையின் ஓரமாய் நடக்க ஆரம்பித்தார்.

நகருக்குள் மாறுவேடத்தில் போலீஸாரும் அவரைத் தேடி அலைய
ஆரம்பித்திருந்தனர்.

2

"அப்பா..." சிறகு பொசுங்கிப் போன புறாக்
குஞ்சின் வலி முனகலுக்குச் சமமான ஓர் அழைப்
பொலி!

முல்லைப் பூக்களை எடுத்து மாலை கட்டிக்
கொண்டிருந்த சிவப்பிரகாசக் குருக்கள் குரலால்
கலைந்து நிமிர்ந்த போது எதிரே வித்யா!

"வாம்மா... வித்யா.. வா... வா... மாப்ள வர
லியா?" மகளைத் திடுமென்று பார்த்த சந்தோஷத்
தில் உற்சாகப் பந்தானார் சிவப்பிரகாசம், எல்லாம் சில நொடிதான்.
வித்யாவின் வாடிய தோற்றம், தளர்ந்த நடையும், இலே சாகக் கலைந்
திருந்த தலைமுடியும் அவரைக் கவலைக்குள்ளாகிய போது வித்யாவே
பேசினாள்.

"அவர் வரலைப்பா.. ஏகப்பட்ட வேலை அவருக்கு..." என்றாள்.

"சரி உட்கார்.. ரங்கா, உன் மருமகள் வந்துருக்கா காபி போட்றி..."
அவளை உட்காரச் சொன்ன ஸ்திதியில் குரலை ஒடிக்காமல் அப்ப
டியே சமையற்கட்டுப்புறம் திரும்பினவர். திரும்பவும் வித்யாவை
பார்த்தபோது அவள் உட்காரச் சிரமப்படுகிறமாதிரி தோன்றியது.

"ஏம்மா... உட்காரத் தயக்கப்படற மாதிரி தெரியறதே! என்
னம்மா?"

"ஒண்ணுமில்லப்பா..." என்ற படி அமர்ந்த வித்யாவின் முகம் வலி
யால் சுணங்குவது போல் ஒரு சுணுங்கு சுணங்கி அவள் வாயார 'ஆ'
என்று முனங்க வைத்தது.

காப்பித் தம்ளருடன் வேகவேகமாக வந்த ரங்காகூட வித்யாவைப்
பார்த்துப் பரவசமாகி "என்ன இது விது.. கடுதாசி கூடப் போடாமப்



புறப்பட்டு வந்திருக்கே.. மாப்ள சௌக்யம் தானெ?" கேட்க வைத்தது.

"சௌக்யம் அத்தை" என்று வித்யா சொன்ன தோரணையில் உற்
சாகமில்லை. சிவப்பிரகாசம் அர்த்த புஷ்டியுள்ள மௌனத்தில் விழுந்
திருந்தார்.

"ஏன் ஒரு மாதிரி இருக்கே. மேலுக்கு முடியலையா?" ரங்கா.

"இல்ல அத்தை..." வித்யா.

"சரி எழுந்திரு.. குளிக்கறதா இருந்தா வெந்நீர் போட்டுத் தரேன்.
வா, சமையற்கட்டுப் பக்கம் போய் பேசுவோம்..." ரங்கா.

வித்யா எழுந்தபோதும் அதே வலி முனங்கல்! ரங்காவும் அதைக்
கவனிக்கத் தவறவில்லை. பார்வையில் லேசான சோர்வோடு சிவப்பி
ரகாசத்தைப் பார்த்தபோது அவர் அதிகம் கலங்கிப் போன மாதிரி தெரிந்
தது.

சமையற்கட்டில் சில நிமிடங்கள் கழிந்திருக்கும், கண்ணீரோடு
வாயைப் பொத்திக்கொண்டு வெகு வேகமாக வெளியே வந்தாள்
ரங்கா.

சிவப்பிரகாசத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. முல்லைப் பூமாலை
முடிவடையும் கட்டம்...

"டேய் சிவா... அநியாயத்தைப் பார்த்தியாடா? உன் பொண்ணு
தொடை முழுக்க ஒரே தீக்காயமா இருக்குடா!... பாளம் பாளமா
சிவந்து பொளந்திருக்குடா! அந்த மாப்பிள்ளை சண்டாளன் போட்ட
சூடாம் இது! பாக்க சகிக்கலைடா..."

"எரிமலைக்கு நிகராக வெடித்துவிட்டாள் ரங்கா.
சிவப்பிரகாசத்துக்குப் பதறியது.

"என்ன என்ன சொல்றே ரங்கா.. சூடா? என் பொண்ணு தொடை
யிலையா?" அதிர்ச்சியில் தடுமாறிக் குழறினார்.

"ஆமாண்டா..நீ தரவேண்டிய வரதட்சணைப் பாக்கியால வந்த பிரச்
சினைடா இது! அவளைப்பிடுங்கிக் குதறியிருக்கான் அந்த படுபாவி.
மோசம் போயிட்டோம்டா சிவா. பெரிய இடம்னு சொல்லி அத வித்து
இத வித்து கல்யாணம் பண்ணி வெச்சியே. இப்பப் பார்றா அவ
கோலத்தை.

ரங்காவின் புலம்பலின் எதிரொலியாக, சமையலறையின் கதவோ
ரத்தில் இருட்டோடு இருட்டாக, மெல்லிய விசும்பலோடு கேவிக்
கொண்டிருந்த வித்யாவைப் பார்த்ததும் சிவப்பிரககாசத்துக்கு இதயத்
தில் ஒரு கட்டி வெடித்தது போல் இருந்தது. பேச்சே வரவில்லை.
வேக வேகமாக நெருங்கிய ரங்கா, முழுங்காலுக்கு மேல் சேலையை
உயர்த்தி தீச்சூட்டை சிவப்பிரகாசத்துக்கு காட்ட எத்தனித்த போது,
பெண்மையின் வெட்கத்தோடு அதைத் தடுத்தாள் வித்யா.

அதையும் மீறிக் கரண்டைக்காலில் தெரிந்த ஒரு தீக்கோடு சிவபிர
காசத்தை 'ஆ' என்று அலறவே வைத்து விட்டது.

"ஐய்யய்யோ என்ன இது அநியாயம்? என்னம்மா இதெல்லாம்.
அவன் மனுஷனா இல்ல அரக்கனா? அரக்கன் தான் அவன்... அரக்கன்
தான் அவன்... அரக்கன் தான் அவன்..."

அகண்ட வைகையின் ஓரத்தில் ஒரு பாழ்மண்டபத்தில் நல்ல ராத்திரியில் வெளிப்பட்ட 'அரக்கன் தான்.. அரக்கன் தான்...' எனும் குரல் பக்கமாக உறங்கிக் கொண்டிருந்த பல கதியவற்றவர்களின் உறக்கத்தையெல்லாம் கலைத்து எழுப்பியது.

''யாருய்யா இது.. ராத்திரியில உளறி, இருக்கறவன் தூக்கத்தைக் கெடுத்துக்கிட்டு...'' பக்கமாக படுத்திருந்தவர் கொஞ்சம் கோபமாகி சிவப்பிரகாசத்தை உசுப்பி விட்டார்.

துணுக்குற்று விழித்த பிறகே சிவப்பிரகாசத்துக்கு, அப்பொழுது தான் கண்டது பழைய தனது அனுபவத்தின் எதிரொலிக் கனவு என்பது தெரிந்தது.

பிறகு உறக்கம் பிடிக்கவேயில்லை. அப்படியே எழுந்து உட்கார்ந்து கொண்டார். வெகு தொலைவில் தத்தனேரி மயானம்? அதில் சில சவங்கள் எரிந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்ததும் துக்கம் அவர் தொண்டையை அடைத்துக் கொண்டது.

இப்படித்தானே வித்யா கூட ஒரு நாள் எரிந்தாள்!

சங்கராபுரம் மயானத்தில் போலீஸ் படை சூழ அவள் எரிந்து சாம்பலான அந்த நிஜத்தையும், அதை ஒளிந்திருந்து பார்த்த தனது அவலத்தையும் அசைபோட்ட போது அழுகை வாய்விட்டு வெடித்தே விட்டது.

''என்னய்யா இது... ராத்திரியில உளறிக்கிட்டும், அழுது கிட்டும்! எழுந்திருச்சு போய்யா அப்பால...'' உறக்க மயக்கத்தில் ஒரு பிச்சைக்கார சன்யாசி சூடாகி இரையவும், சிவப்பிரகாசம் அந்த அர்த்த ராத்திரியில், அந்த இடத்தை விட்டு விலக ஆரம்பித்தார்.

''இப்படியே அலைந்து கொண்டருந்தால் எப்படி? இதற்கொரு முடிவுதான் என்ன?'' யோசித்ததன் விளைவாக மறுநாள் பகலில் ஒரு கடிதம் மட்டும் எழுதி தபாலில் சேர்த்தார்!

யாருக்கு?

## 3

விரைப்பான 'சல்யூட்களை அங்கீகரித்தபடி தனது அலுவலகத்தின் உள்ளே நுழைந்த டி.எஸ்.பி. நடராஜ், தனக்காக வந்து காத்திருக்கும் இன்ஸ்பெக்டர் சரவணனை வரச் சொல்லிவிட்டு தன் ஆசனத்தில் சாய்ந்தார்.

இன்ஸ்பெக்டர் சரவணனிடம் ஒரு மேலதிகாரியைச் சந்திக்கப்போகும் படபடப்பும், விவாதிக்கப்போகும் விஷயம் பற்றிய குறிப்புகளும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன.

''சிட் டவுன் மிஸ்டர் சரவணன்...''

''தேங்க் யூ சார்...''

''அந்த கிரிமினல் சிவப்பிரகாசத்தை இன்ஸ்பெக்டர் உமாநாத் பார்த்ததா எனக்குப் போன் பண்ணியிருந்தாரு... உங்களுக்கு கூட அப்தி



ஸ்பாட்லயே தகவல் தந்தாராமே... மேல் நடவடிக்கை என்ன எடுத்தீங்க.''

வெகு முன்னோட்டமாக விஷயத்துக்கு வந்த நடராஜை ஆச்சரியத்தோடு பார்த்தார் சரவணன்.

''சிவியரா ஆக்ஷன் எடுத்தும் அவரைப் பிடிக்க முடியலை சார். முயற்சி இன்னும் தொடர்ந்துகிட்டுதான் இருக்கு. பஸ் ஸ்டாண்ட், ரயில்வே ஸ்டேஷன் இங்கெல்லாம் நம்ம குரூப் ரொம்ப ட்ரிக்கா மூவ் பண்ணிக்கிட்டு இருக்காங்க. இது விஷயமா மேலும் சில காரியம் ஆக வேண்டியிருக்கு சார். நான் புதுசா சார்ஜ் எடுத்துக்கிட்டு இருக்கறதனால எனக்கு இந்த கேஸ் சம்பந்தமா 'டீப்பா' எதுவும் தெரியாது. அதோட கொலை, திருட்டு நடந்த சங்கராபுரம் நம்ம கன்ட்ரோல் கிடையாது. நமக்கு வந்த இன்பர்மேஷன் பேர்ல நாம் மூவ் பண்ணிக்கிட்டிருக்கோம். ஆள் அகப்பட்டா, 'அரெஸ்ட் வாரன்ட்' பிறப்பிக்கறதுலயும், 'என்கொயரி' வைக்கறதுலயும் சில சிக்கல் இருக்கு... சங்கராபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் இங்க இருந்தா நல்ல துன்னு நினைக்கறேன்...''

''அவர வரச் சொல்லியாச்சு மிஸ்டர் சரவணன்.'' பட்டென்று பதில் வந்தது டி.எஸ்.பி.யிடமிருந்து அவர தொடரவும் செய்தார், ''நம்ம வேலை ரொம்ப வேகமா இருக்கணும். அந்த கிரிமினல் ஒண்ணும் பிறப்புலயே அப்படிப்பட்ட ஆள் கிடையாது. ரொம்பவும் நல்ல மாதிரியான ஆள். சாந்தமான மனுஷன். ரொம்ப ஈஸியாப் பிடிச்சுடலாம். இந்தக் கேஸ் சம்பந்தமா சில மேல் விஷயங்களைத் தெரிஞ்சுக்கிறது உங்களுக்கு நல்லது...'' பேசிவிட்டு ஒரு சிகரெட்டைக் கொளுத்தினார் நடராஜ். சரவணனுக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம். எள் என்பதற்கு முன் எண்ணெயாக நிற்கும் அவரது வேகம் சரவணனை அசத்தியது.

''சிவப்பிரகாசம் பாரம்பரியம் கொண்ட நல்ல மனுஷன். ஊரே அவரை மதிக்கறாங்கன்னா பார்த்துக்குங்க...

அவருக்கு ஒரே பொண்ணு! அதைத்தான் கொலை செய்யப்பட்ட ஆடிட்டர் மூர்த்திக்கு கொடுத்திருந்தாரு. அந்த ஆடிட்டர் ஒரு சரியான ரோக்! சித்ரவதை பண்ணியிருக்கான் அந்தப் பெண்ணை!...'' என்றார் நடராஜ்.

''ரீசன்?''... நுணுக்கமாக இடைவெட்டினார் சரவணன்.

''குட், நீங்களா கேட்கணும்னுதான் பாலீஷா சொன்னேன். காரணம் வழக்கமா நம்ம டிபார்ட்மென்ட் மீட்பண்ற சீர் பாக்கி, வரதட்சணை பாக்கிக் கொடுமை, அதனால ஏற்படற தீக்குளிப்பு விவகாரம் தான்! என்னிக்கு இந்தப் பாழாப்போன சமூகக் கொடுமை நீங்குதோ அப்பத்தான் 'டோட்டல் ரிலீப்' எல்லோருக்கும். சரி விஷயத்துக்கு வரேன்.

சிவப்பிரகாசம் அதனால் ரெம்பப் பாதிக்கப்பட்டிருக்காரு. ரொம்ப சாப்டான ஆள் அவரு. அவரையே அந்த ஆடிட்டர் படுத்தின கொடுமை புலியா மாத்தியிருக்குன்னா பார்த்துக்குங்க. ஒரு நாள் நியா

யம் கேட்கப் போய்க் கழுத்தை நெரிச்சுக் கொன்னுட்டாரு... இதெல்
லாம் சாட்சிகளைக் கொண்டு நான் அனலைஸ் பண்ணின விஷயம்.
குற்றவாளியோட வாக்குமூலத்துக்குப் பிறகுதான் முழு உண்மை
யும் தெரியும்...'' நடராஜ்.

''எக்ஸ்கியூஸ் மீ சார்... அந்த நடராஜ் சிலை களவு போனது சம்பந்
தமா...'' சரவணன் இடையே நுழைய,

''சொல்றேன்... இந்த சிவப்பிரகாசம், ஆடிட்டரைக் கொலை
செய்த அன்னிக்குத்தான் சிலையையும் காணோம்!

ரொம்ப மதிப்பான சிலை அது. சங்கராபுரம் ஒரு பிரபலமான புண்
யஸ்தலம்கறதுனால அதுக்கு வேல்யூவும் கூட! என்பதிலிருந்து நூறு
கிலோ வெயிட் இருக்கலாம்... ஏற்கனவே சில தடவைகள் அந்தச்
சிலையைத் திருட முயற்சி நடந்திருக்கு. ஆனா பலிக்கலை. அதனால
பலத்த பாதுகாப்பு ஏற்பாட்டுக்கு நடுவுலதான் அதை வெச்சுருந்துருக்
காங்க.

அப்படியிருந்தும் காணாமப் போயிருக்கு. இன்வெஸ்டிகேஷன் ரிப்
போர்ட்ல கோயில் சன்னதிக்குள்ற யாரும் வந்ததுக்கான அடை
யாளமே இல்லை. சன்னதி கதவுல இருந்து, பிரகார கதவுல இருந்து
எல்லாம் பூட்டினது பூட்டினபடி இருக்கு. சிவப்பிரகாசத்தோட கைரே
கைகள் தான் பதிவாகியிருக்கு!

கொலை செய்துட்டு, சிலையோட அவர் தப்பியிருக்கலாம். ஆனா
அது அவ்வளவு சுலபமான விஷயமில்லை. சிக்கலோட சூப்பர் நாட்
இங்கதான்! கோயில் சிப்பந்தி ஒருத்தரை என்கொயரி பண்ணினதுல
மேலும் சில விஷயம் கிடைச்சுது.

சிலை திருட்டுப் போனதுக்கு முந்தி சிலையைக் கற்பக்கிரத்துல
வெச்சு ஒருத்தர் போட்டோ எடுத்திருக்காரு! கோயில் வழக்கப்படி
அதுக்கு அனுமதி கிடையாது. போட்டோவும் எடுத்தது கிடையாது.
இது விஷயத்துல சிவப்பிரகாசம் ரொம்ப ஸ்ட்ரிக்டான ஒரு ஆர்
தடக்ஸ். இருந்தும் அவரே போட்டோ எடுக்க அனுமதிச்சிருக்கார்னா
அது ஆச்சரியமான விஷயம் மட்டுமில்ல; பிரச்சினைக்குரிய விஷய
மும் கூட.''

''நிச்சயமா சார்... இந்தக் குருக்களோட பொண்ணு இறந்தது சம்
பந்தமா...'' என்று இழுத்தார் சரவணன்.

''புரியுது மிஸ்டர் சரவணன், அவங்க மரணம் கொலையில்லை!
தற்கொலைதான்! அதுல சந்தேகமில்லை. மண்ணெண்ணெயை விட்
டுக்கிட்டுத் தீக்குளிச்சுடுச்சு அந்தப் பொண்ணு! அது முடிஞ்சு போன
விஷயம். இந்தக்கேஸுக்கு ஒரு முக்கிய விபரமா பயன்படலாம் தட்ஸ்
ஆல். ஆனா இந்தக் கேஸோட நெக்ஸ்ட் மூவ்மென்ட்டே குற்றவாளி
பிடிபட்டாத்தான். அது நாம செய்தா, உங்க பியூச்சர், என் பியூச்சர்,
சமூகத்தோட பியூச்சர் எல்லாமே நல்லா இருக்கும்...''

விளக்கம் போதுமா என்பது போல் பேசிவிட்டுப் பார்த்தார்
டி.எஸ்.பி.

சரவணன் போதும் என்பது போல் சல்யூட் அடித்து விடைபெற்றுக்



கொண்டு வெளியே வந்தார்.

திரும்பவும் டி.எஸ்.பி. அழைப்பதாக உதவியாளர் கூறவும் வேக
மாகத் திரும்பினார் சரவணன்.

''மிஸ்டர் சரவணன், சங்கராபுரம் இன்ஸ்பெக்டர் வந்தா இன்னும்
சில 'ஹாட் நியூஸ்' கெடைக்கலாம். மேட்டரை எனக்கு பார்வர்ட் பண்
ணிட்டு நீங்க சிவியரா மூவ் பண்ணுங்க... நாளைக்குள்ற ஆளைப்
பிடிச்சுடுவீங்களா?'' அளவான புன்னகை, அழுத்தமான எதிர்பார்ப்பு,
நைச்சியமான குரல், தோரணையான பார்வை நான்கு விதமான கலப்
போடு நட்ராஜ் கேட்க.

''வீ வில் டூ த பெஸ்ட்..! சார்..'' என்றார் சரவணன்.

காவேரியிடம் அசாத்திய வேகமிருந்தது!

நீளத்திலும் அகலத்திலும் சங்கராபுரத்தையே அசத்திக் கொண்டு
ஏகாண்டமாய் விரிந்து கிடந்த அவள் ஒரு ராஜபுரவியைப் போலத் திமி
றிக் கொண்டு ஓடும் அழகைப் பார்க்க இருகண்களின் போதாமை தடுத்
தது! வேலூர், மோகனூர், தொட்டியம், முசிறி, திருவரங்கம், தஞ்சை
என்று ஏகதூரம் ஓடி நீலக்கடலைக் காணப் போகும் உற்சாகம் ததும்பி
வழியும் நிலை...

சங்கராபுரத்தைக் கரையோர யானை மடுவில் நீர் சுழற்றிக் கொண்டு
ஓடிக் கொண்டிருந்தது! பக்கமாகச் சிலர் இடுப்பளவு கரை ஓர நீரில்
குளித்துக் கொண்டிருக்க யானை மடுவருகில் மாத்திரம் ஒரு பூச்சி புழு
வையும் காணோம்! பக்கமாகச் சென்றாலே எங்கே சுழலுக்குள் சிக்கி
விடுவோமோ எனும் அச்சத்தில் தூர நின்று குளித்துக் கொண்டிருந்த
னர்.

திடும்மென்று அங்கே புழுதியைக் கிளம்பிக்கொண்டு வந்து நின்ற
போலீஸ் ஜீப்புகள், எல்லோரையும் ஒரு கணம் குலுக்கியது. ஜீப்புக
ளிலிருந்து இறங்கியவர்கள் மத்தியில் டி.எஸ்.பி. நட்ராஜும், இன்ஸ்
பெக்டர் சரவணனும், சங்கராபுரம் இன்ஸ்பெக்டர் சாந்தாராமும் தவிர
மற்றவர்கள் தீயணைப்புப் பிரிவைச் சார்ந்தவர்களாகத் தென்பட்டனர்.

வந்த வேகத்தில் ஆனைமடுவை இனங்கண்டு கொண்டு அந்த
இடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். அதனுள் ஆக்சிஜன் சிலிண்
டருடன் கயிற்றைக் கட்டிக் கொண்டு துணிச்சலுடன் ஒரு போலீஸ்கா
ரர் இறங்கினார். கயிற்றின் மறுமுனையைக் கரைக்கு மேலே ஒரு
போலீஸ்காரர் பிடித்துக் கொண்டு நிற்க, ஆக்சிஜன் சிலிண்டரின் பாரத்
தோடு மூழ்கி மூழ்கி எழ ஆரம்பித்தார். அவர் ஒவ்வொரு முறையும்
மேலே வரும்பொழுதும் நட்ராஜும், சரவணனும், சாந்தாராமும் ஆர்
வத்தோடு பார்த்தார்கள்.

களைத்துப் போன அவர் கரையேறி ஆசுவாசிக்க ஆரம்பித்தார்.
சிறிது ஓய்விற்குப் பின் பேசினார்.

''நீரோட சுழற்சியும், அழுத்தமும் அதிகமாக இருக்கறதாலே ஸ்டெ
டியா ஒரு இடத்துல நின்னு தேட முடியலை. இருந்தும், எவ்வளவு
முடியுமோ அவ்வளவு தேடிப் பார்த்துட்டேன் சார்.. மணலைத் தவிர
எதுவும் இல்லை..''

''ஒரு வேளை, சிலையை மண்மூடியிருக்கலாம்...
கைகளால் மணலை விலக்கி விட்டுப் பார்த்தீங்களா?''
நட்ராஜ் தீர்க்கமாகக் கேட்டார்.

''ஒரு அடிக்கும் மேலே கையாலே துளைபோட்டுப் பார்த்தேன்.
பாசிபிடித்த கற்கள்தான் தட்டுப்பட்டது. சிலை இல்லை!''

அனுபவம் மிகுந்த அவர் கருத்தை அதற்கு மேல் மறுக்காமல் சாந்
தாராமைப் பார்த்தார் நட்ராஜ்.

''அந்த ஆள் நம்மகிட்ட விளையாடிப் பார்க்கிறான் போல
இருக்கு..'' என்று கருவின் நட்ராஜை வேகத்தோடு பார்த்துப் பேசினார்
சாந்தாரம். ''எக்ஸ்க்யூஸ் மீ சார்... எனக்குச் சிவப்பிரகாச குருக்களை
ரொம்ப நல்லாத் தெரியும், அவர் எழுதினது பொய்யா இருக்காது..''

''அப்படீன்னா சிலை கிடைச்சிருக்கணுமே? சரவணன்.

''சிலையை யானை மடுவுக்குள்ளாற அவர் போட்டுட்ட போதிலும்,
நீரோட்டத்துல அது நகர்ந்து வேறு இடங்களுக்குப் போக நிறையவே
வாய்ப்பு இருக்கு. இல்லைன்னா அதிக அளவு மண்மூடி புதையுண்டி
ருக்கலாம். நவீன கருவிகளைக் கையாண்டு தேடிப்பார்த்தா கிடைச்சு
டும்னு நம்பறேன்.''

பதிலுக்கு இறுகின ஒரு மௌனம்தான் நட்ராஜிடம் தெரிந்தது.

''ஓ.கே... நாம மேல என்ன என்ன செய்யணுமோ அவைகளைச்
செய்வோம். இந்த சம்பவத்துக்குப் பிறகு ஒரு சந்தேகம் ஏற்பட்டி
ருக்கு.''

''நமக்கு வந்த கடிதம் சிவப்பிரகாச குருக்கள் எழுதினது தானா?
ஏன் இது வேற யாரும் எழுதியிருக்கக் கூடாது?'' நட்ராஜ் கேள்வி
யோடு கூடி விழிகள் கடிதத்தில் திரும்பவும் ஊர்ந்தன.

''மதிப்பிற்குரிய சங்கராபுரம் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு.
வந்தனம் பல.

காணாமற் போய்விட்ட சங்கராபுரம் நடராஜர் சிலை தொடர்பாக
வும், எனது மாப்பிள்ளை கொலை சம்பந்தமாகவும் எனக்குத் தங்கள்
துறை வலை விரித்திருக்கும் இந்த நிஷ்டூரவேளையில் ஒரு தகவலைத்
தர பிரயாசைப் படுகின்றேன்.

எந்த வகையிலும் நான் குற்றவாளியல்ல என்பதை நிரூபிக்க வேண்
டிய சங்கடமும், அதைவிட உயிரினும் மேலான சில கர்மாக்களை நான்
செய்ய வேண்டிய ஸ்திதியிலும் இருப்பதால் தலைமறைவாக நேரிட்
டுள்ளது.

இது எனது பொல்லாத நேரம். சந்தித்துத்தான் தீரவேண்டும். அந்த
சங்கரன் துணையோடு நான் இதில் வெற்றி பெற்றாக வேண்டும். எனது
செயல்பாடுகளில் குற்றம் குறை இருப்பின் சகித்து மன்னிக்கவும்.

ஸ்ரீ நடராஜர் விக்கிரகம் களவு போகவில்லை!

அது சங்கராபுரம் காவேரி யானை மடுவில் உள்ளது. துழாவி எடுத்
துப் பத்திரமாகப் பாதுகாக்கவும், அது தொடர்பான களவு முயற்சிகளை
விரைவில் நேரிலோ, வேறு விதத்திலோ தெரிவிப்போம். தற்போது
எதையும் பேச முடியாத நிலையில் உள்ளேன். இதைப் பிரம்ம ரகசிய



மாய்க் கருதிச் செய்யவும், இது அவ்வளவும் சத்யம், அல்லாதபட்சத்
தில் என பாசத்துக்குரிய சகோதரிக்கு ஏதும் பங்கம் நேரலாம்.
எம்பெருமான் திருமேனி இனியும் மண்ணுக்குள் புதையுண்டு
கிடத்தல் சரியெனப் படவில்லை. வரும் சிவராத்திரிக்கு அவன் ஆலய
சன்னிதானத்தில் இருந்தாக வேண்டும். அதனாலேயே அவன் மேல்
பாரத்தைப் போட்டு இதைத் தெரிவித்துள்ளேன். இது விஷயத்தில்
நான் குற்றவாளியில்லை. நான் குற்றவாளியில்லை.
எம்பெருமான் கிருபை எனக்கிருக்கும் வரை நான் தங்கள் பிடிக்கு
அகப்பட மாட்டேன் என்றே நம்புகிறேன். எனது சகோதரி ரங்காவைப்
பாதுகாக்கவும், அவளுக்கு ஆபத்து நேரலாம்...''
கடிதத்தை நட்ராஜ் திருப்பவும் படித்து முடிக்கவும், சாந்தாராம் காத்
திருந்ததைப் போல் பேசினார்.
''சார் அதை வெரிபை பண்ணிட்டேன்... சிவப்பிரகாச குருக்கள்
தன் கைப்பட எனக்குச் சில புகார் கடிதங்கள் எழுந்தியிருக்கார். அதை
யும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்துட்டுத்தான் இதையே நான் நம்பி
னேன்.
''ஓ.கே. அந்தக் கடிதங்களைக் காட்டுங்க பார்ப்போம்..''
சங்கராபுரம் ஸ்டேஷனில் ஒரு பிரம்பு நாற்காலியில் தனது பரந்த
முதுகைச் சாய்த்துக் கொண்டு நட்ராஜ் சிவப்பிரகாச குருக்களின் புகார்க்
கடிதத்துக்குள் நுழைந்தபோது, அதுவரைக்கும் கனன்று கொண்டிருந்த
அந்தக் கல்போன்ற மனது கனிப் பக்குவத்துக்கு உருமாற ஆரம்பித்தது.
''பெருமதிப்பிற்குரிய சங்கராபுரம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்
அவர்களுக்கு, வந்தனம்.
தாளமாட்டாத வேதனையோடு சங்கராபுரம் சிவன்கோயில் குருக்
களாகிய சிவப்பிரகாசமாகிய நான் இந்தப் புகார் கடிதத்தை எழுதுகின்
றேன்.

கடந்த வைகாசியில் புத்ரி ஸ்ரீவித்யாவை பக்கத்து டவுன் ஆடிட்
டர் கோதண்டராமனின் புத்ரனாகிய ஆடிட்டர் மூர்த்திக்கு விவாகம்
செய்து கொடுத்திருந்தேன். விவாகம் அனேக பெரியவர்களின் முன்
னிலையில் லௌகீக தாத்பர்யங்களோடு இனிதே நடந்து முடிந்தது.
ஸ்ரீமாப்பிள்ளையவர்க்கு வரதட்சனையாக ரூபாய் பத்தாயிரம் தரச்
சம்மதித்திருந்தேன். அத்துடன் தலைத் தீபாவளி நாளில் வைர மோதி
ரம் இடவும் நிச்சயதார்த்த வேளையில் சத்ய ஒப்புமானமும் கொடுத்
திருந்தேன்.

எனது பூர்வாங்க சொத்துக்களாக ஒரு சிறிய தென்னத்தோப்பு, வீடு
எனக்கு உண்டு. அவைகளை விற்றாவது என் மகள் வாழ்க்கையை மங்
களமாக்க விரும்பியதால், மேற்படி பெரிய ஒப்புதல்களை அளித்திருந்
தேன்.

தோப்பின் பெயரிலும், வீட்டின் பெயரிலும் பங்காளிகளால் எதிர்
பாராது வில்லங்கம் ஏற்பட்டு விவகாரம் வழக்கு மன்றத்துக்குச் சென்று
விட்டபடியால், மேற்படியான பொருட்டு எனது மகள் மாப்பிள்ளை
யவர்களிடம் பட்ட சொற் சித்ரவதையும், உடற் சித்ரவதைகளும் சகிக்க

முடியாதவை!

குடும்ப விஷயம் வீதிக்கு வருதல் எனும் தர்மம் காரணமாக அது பொழுதுகளில் யான் வாளாவும், சங்கரன் பாதம் தொழுதும் கிடந்தேன்.

தற்பொழுது நிலைமை முற்றி வெடித்துள்ளது. என் மகள் அங்கே உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாக அறிகிறேன். இனி என் மகள் அங்கு வாழ்தல் சாத்தியமில்லை என்பது என்னுள் முடிவாகி விட்டது.

இப்புகாரை கண்டு என் மகளை மீட்டுத்தர வேண்டுகிறேன். குறைந்த பட்சம் அங்கு நடக்கும் கொடுமைகளைத் தடுத்தால் போதும்,

எனக்குச் சுற்றம் பந்துக்கள் உதவி அவ்வளவாகக் கிடையாது. ஒத்தாசைக்கு ஒரு விதவைச் சகோதரி மாத்திரம் உண்டு. என் மகளே எனக்கு சர்வமும். தங்கள் உதவியின்றி இக்கொடுமை நீங்காது எனப்பட்டதன் பொருட்டுப் புகார் கடிதம் வரைந்துள்ளேன். ஆவன செய்து ஆதரிக்கவும்.

'' ஆமாம் நீங்க இதன் பேர்ல மேல் நடவடிக்கை என்ன எடுத்தீங்க?'' கடிதத்தைப் படித்த கனத்தோடு சாந்தாராம் பக்கம் திரும்பினார் நடராஜ்.

''மூர்த்தியை நானே நேர்ல மீட் பண்ணினேன். புகாரைப் பற்றிச் சொல்லி விளக்கம் கேட்டேன். கணவன் மனைவி குடும்ப விவகாரமா இருந்தாலும் காட்டுமிராண்டித் தனமான அடக்குமுறைக்கும் சித்ரவதைக்கும் சட்டத்தில் அனுமதி கிடையாது. வந்துருக்கற புகார் பேர்ல ஆக்ஷன் எடுத்தா சிவியர் பனிஷ்மென்ட் கிடைக்கும்னேன். அவன் ஒரு சூப்பர் கிரிமினல்!''

''புகாரே பொய், என் மனைவி கூட நான் சந்தோஷமா இருக்கேன். அவளையே கூப்பிட்டுக் கேட்டுப் பாருங்கன்னான்! கூப்பிட்டுக் கேட்டேன். அந்தப் பொண்ணும் தலையசைச்சது! ஆனா அதுல துளியும் உற்சாகமில்லை. பயந்த, மிரட்டப்பட்ட நிலையில் செஞ்சது போலத் தோணிச்சு! அதுக்கு மலேரியாவைக் காரணம் சொன்னான்.

டோட்டலா சொல்லப் போனா இந்தப் பிரச்சினையை அந்தப் பெண்ணோட துணையில்லாம சந்திக்க முடியாத நிலைமைக்கு உள்ளாயிட்டோம்''

''இவ்வளவோட நிறுத்திக்கிட்டீங்களா?'' நட்ராஜ் ஆவலோடு கேட்டார்.

''இல்ல சார்... மேற்கொண்டு சாமர்த்தியமா அந்த நபரை டேக்கிள் பண்ண முயற்சி செய்தேன். அதுக்குள்ற அந்தப் பெண் தீக்குளிச்சிடுச்சு... தீக்குளித்து ஒரு தற்கொலை முயற்சிங்கறதுக்கு எந்தச் சந்தேகமுமில்லை.

''ஏன்னா, அந்தப் பொண்ணு விரக்தியால தீக்குளிச்சது... அவள் அப்பா சிவப்பிரகாசத்தோட வீட்ல அந்த விவரங்கள் உங்களுக்குத் தெரிஞ்சது தான்.''

உள்ளே வாதப் பிரதிவாதம் நடக்கும் அதே வேளையில் காவேரியின் யானை மடுவின் ஓரமாய் இரண்டு போலீசார் சுழலும் மடுவைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.



செய்தியறிந்து மடுவைச் சுற்றி ஊரே கூடிவிட்டிருந்தது. சுழன்று
ஓடும் காவேரிக்கு ஒரே ஆச்சரியம்!
''மடுவுக்குள்ற நம்ம சிவன் கோவில் விக்கிரகம் இருக்காம். தலை
மறைவா இருக்கற குருக்கள் போலீசுக்கு தெரிவிச்சுருக்காரு..''
''மடுவுக்குள்ற எப்படி சிவன் கோவில் விக்கிரகம் வர முடியும்.
திருடிக் கிட்டு போகும் பொழுது ஏதாவது ஏற்பட்டு மடுவுக்குள்ற
விழுந்திருக்கலாம்.''
''திருட்ட குருக்கள் செய்திருக்க முடியாது. அவரால தான் விக்கிர
கம் காப்பாற்றப்பட்டிருக்கு. எந்தக் களவாணிப் பயலோ களவாடப்
பார்த்திருக்கான்... அவன் அழிஞ்சு போக..''
''குருக்களைப் போல ஓர் உத்தமமான மனுஷரைத் தேடினாலும்
பிடிக்க முடியாது. பாழாப்போன பொல்லாத நேரம் அவரை இப்படி
அல்லாட வெச்சுக்கிட்டு இருக்கு.''
கரையோரத்து மனித நெருக்கங்களில் கருத்துப் பிரசவங்கள் கன
ஜோராக நடந்து கொண்டிருந்தன.
கேட்கச் சகியாதவனாட்டம் சூரியன் மேற்கில் வேக வேகமாய்
மறைய ஆரம்பித்தான்.
வளைவான பாதை தான் ''பழமுதிர் சோலைக்கு'' எனும் அறிவிப்
போடு சுருக்கப்படுத்துக் கிடந்தது. அடி வாரத்து அழகர்கோவிலில் அவ்
வளவாகக் கூட்டமில்லை.
மலைத் தென்றலின் ஒய்யார வீச்சு ஓங்கி வளர்ந்த மரங்களை
அசைத்து நடனமாட விட்டுக் கொண்டிருந்தது.
'இங்கே முருகனின் காலடியில நிம்மதியாகக் கிடக்கலாம்' நினைப்
போடு குறுக்குப் பாதையில் முன்னேறிக் கொண்டிருந்தார். சிவப்பிர
காசம், மனசுக்குள்ளே அந்தக் கடவுளோடு கூடிய கந்தசாமி தெரிந்
தான்.
''சாமி உங்க உபகாரத்தை மறக்க முடியாது. நான் பழமுதிர் சோலை
யில் தான் பூஜை சாமானை வித்து பொழப்பு நடத்திக்கிட்டிருக்கேன்.
அங்கிட்டு வந்தீங்கன்னா என்னிய பாராம போவக் கூடாது. வந்து என்
மனையில் குந்தி இருந்து போட்டுத்தான் போவணும்..''
சில மாதம்ப முன்னால் நல்ல மதியவேளை ஒன்றில் ஓர் எளிய
உதவியின் பேரில் கந்தசாமி எனும் நபர் பேசிய பேச்சு அவர் காதோ
ரம் ஒலித்து அடங்கியது.
ஒரு அமாவாசையன்று ஐயாயிரம் ரொக்கத்தோடு சங்கராபுரத்திற்கு
வந்தவன் இந்தக் கந்தசாமி... தனியாக வியாபாரம் செய்யப் பணம்
தேவைப்பட்டதன் எதிரொலியாக மனைவியின் கழுத்து நகைகளை
ஐயாயிரமாக்கி விட்டிருந்தான். கையில் நிறைந்த தொகை சேரவும்
கொஞ்சம் மதுவையும் தனக்குள் சேர்த்துக் கொண்டான். விபரீதம்
அதனால்தான் ஆரம்பமாயிற்று. போதையில் பணப்பை போன இடம்
தெரியவில்லை. ஆடிப்போய் விட்டான் கந்தசாமி. பதறிப்போய் நின்
றபோது தட்டுப்பட்டது சிவன்கோயில்.
சன்னதிக்குள் நுழைந்து அழுது புலம்பியவனின் எதிரே அவன்

தொலைத்த ஐயாயிரத்தை நீட்டினார் சிவப்பிரகாசம்.
அவனுக்குச் சந்தோஷத்தில் மூச்சிரைத்தது..
''வர்ற வழியில தெருவுல இந்தத் தொகையைப் பையோட கண்
டெடுத்தேன். நீ மட்டும் இப்ப வந்துருக்க வேன்னா கோயில் நடை
யைச் சாத்திவிட்டுப் போய் போலீஸ்ல கொடுத்துடலாம்னு இருந்
தேன். நீ வந்துட்டே நல்லதாப் போச்சு..''
அவன் அவர் காலிலேயே விழுந்துவிட்டான்.
''எப்படிப்பா இவ்வளவு பெரிய தொகையைத் தொலைக்க உனக்கு
மனசு வந்தது?'' அவர் இயல்பாகக் கேட்டார்.
''இது சாதாரண பணமில்ல சாமி! என் பொண்டாட்டி தாலி முதற்
கொண்டு இதுல அடக்கம். வியாபாரம் செஞ்சு பொழைக்கப் பணம்
தேவைப்பட்டது. நகைகளை வித்துப்பணம் புரட்டினேன். பணம்
புரண்ட குஷியில கொஞ்சம் சபலப்பட்டுத் தண்ணி அடிச்சிட்டேன்.
அந்தத் தப்புக்குத் தண்டனையா பணத்தைத் தொலைச்சுட்டு அல்லா
டும்படி ஆயிடுச்சு...
'சாமி உங்களுக்குக் கோடி கோடி நன்றி சாமி! முழிச்சுக்கிட்டு இருக்
கும்போதே திருடற உலகத்துல, கிடைச்ச பணத்தை நேர்மையா ஒப்
படைச்சு என்னை வாழ வெச்சுட்டீங்க. உடம்புல உசுர் நிக்கற வரைக்
கும். மறக்க முடியாதவர் சாமி நீங்க''
அன்று உருவை நினைத்துக் கொண்டு பெருமூச்சு விட்டார் சிவப்
பிரகாசம்.
''கந்தசாமி உன்னைத் தான் நம்பி வருகிறேன். என்னை ஆதரிப்
பாயா?'' மனதில் எதிர்ப்பார்ப்பு விசுவரூப மெடுத்தபோது ஆதரிப்பேன்
என்பது போல் மணிச்சப்தம் கேட்டது. சன்னதியும் நெருங்கிவிட்டது.
துண்டால் தலையை இறுக்கச் சுற்றிக் கொண்டார். யாரும் பார்த்து
அடையாளம் கண்டு கொண்டு விடக் கூடாதே எனும் அச்சம் விழிக்
குள் வந்து பரவிவிட்டிருந்தது.
'நிச்சயம் அகப்பட மாட்டேன்! முடிய வேண்டிய காரியங்கள் முடி
யுமட்டும், நான் அகப்படவே மாட்டேன். என்னை ஆண்டவன் அகப்
பட விடமாட்டான். எவ்வளவு பூஜைகள் செய்திருப்பேன். அந்த சக்தி
வீண் போகுமோ? போகாது! அகப்பட மாட்டேன். அகப்பட மாட்
டேன்... சங்கரா அலைக்கழிக்காம என்னை ஆதரிப்பா...'
மனதின் மருகலோடு பழமுதிர் சோலையின் எளிய முருகன் சன்
னதியின் முன் கந்தசாமியைத் தேடியது சிவப்பிரகாசத்தின் கண்கள்,
கற்பூரத்தைக் கட்டி வைத்துக் கொண்டிருந்த கந்தசாமியை அவர்
அதிக சிரமமில்லாமலே அடையாளம் காண முடிந்தது. நல்ல கட்டு
மஸ்தான இளமையினூடே நெற்றியில் நீறு மணக்க ஒரு பக்திப் பழ
மாகத் தென்பட்டவனை அந்த முருகனாகவே பார்த்தார் சிவப்பிரபகா
சம்.
''கந்தசாமி...'' உடைந்துபோன அவரின் முதல் குரலில் அவன்
திரும்பவில்லை.
''கந்தசாமி...'' கொஞ்சம் குரலில் உரப்பை கூட்டின போது நிமிர்ந்



துப் பார்த்தான். ஆரம்பத்தில் அடையாளம் தெரியவில்லை. தாடியும்,
மீசையும், அதன் வெளுப்பும் அவரை யாரோவாக்கிவிட்டன.
''ஆரு நீங்க?'' அவன் கேள்வியால் சிவப்பிரகாசத்தின் இதயத்தில்
விரிசலே கிளைவிட்டு விட்டது.
''யாரா?.. நான் சங்கராபுரம் குருக்..'' முடிக்கும் முன்னே புரிந்து
கொண்டான் கந்தசாமி..
''வாங்க... சாமி... வாங்க... வாங்க.. சொன்ன மாதிரி என்னை மறக்
காம, பார்க்க வந்துட்டீங்களே.. வாங்க... சுவாமி தரிசனம் எல்லாம்
ஆச்சா? ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? அடையாளமே தெரியாதபடி
மாறிட்டீங்களே.. மேலுக்கு முடியலையா...?''
உடைந்த அணையாட்டம் உற்சாகப் பெருக்கெடுத்த கந்தசாமியைப்
பதட்டத்தோடு பார்த்து மெல்லப் பேசு என்பது போன்ற பாவனைக்கு
வந்தார் சிவப்பிரகாசம். ஊடே ஊடே விழி மணிகளைச் சுற்றிச் சுற்றி
விரட்டி எச்சரிக்கைப் பதிவுகளை மனத்தில் செய்து கொள்ளவும் செய்
தார்.
கந்தசாமிக்கு அவர் நிலையும் கலக்கமும் துளியும் புரியவில்லை.
'' பாண்டி ஏலே பாண்டி சங்கராபுரத்துல நான் பணத்தை தொலைச்
சுப்போட்டு சோத்துக்கும் கதியில்லாம நின்னப்ப ஒரு சாமி எனக்கு
உபகாரம் பண்ணி, பணத்தையும் தந்து அனுப்பி வெச்சாருன்னேனே
அவரு வந்திருக்காருடா. த.. சாமி தான் அவரு. ''
கந்தசாமி தனது நன்றி வெளிப்பாட்டை பக்கத்து பூக்கடைப் பாண்
டியனிடம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். இனியும் தாமதிக்க
விடக்கூடாது என்பது போல் சிவப்பிரகாசம் வேகமானார்.
'' கந்தசாமி கொஞ்சம் உன் கூட தனியா பேசணும்பா. முடியுமா?
சீக்கிரம் '' பரபரப்பாய் கேட்டார்.
'' அதெல்லாம் பொறவு சாமி. மொத என்ன சாப்பிடறீங்க? நான்
வாங்கித் தந்தா சாப்பிடுவீங்கள்ல ''-அவன்.
''அதெல்லாம் பின்னால். முதல்ல ஒரு தனியிடத்துக்கு போவோம்
வா.'' வேகமாக நடக்க ஆரம்பித்தார் சிவப்பிரகாசம்.
சன்னதியில் அத்தனை கூட்டமில்லை. அவரை ஆச்சரியத்தோடு
பின் தொடர்ந்தான் கந்தசாமி.
பருத்த பாறையை நெம்பிக் கொண்டு நிமிர்ந்திருந்தது ஒரு வாகை
மரம். காற்றின் விளையாட்டால் கழன்று விழுந்த இலைகளை சருகு
களாய் நிழற்தரையை மூடியிருக்க சூழ்நிலையில் ஒருத்தர் இல்லை.
அங்கே காக்கை கூட பறக்க அச்சப்படும் அசாத்திய அமைதியை
கிழித்துக் கொண்டு கேட்டார் சிவப்பிரகாசம்.
'' ஏன் கந்தசாமி நீ நியூஸ் பேப்பர் படிக்கிறதில்லையா? ''
அவன் ஆச்சரியத்தோடு ''இல்ல சாமி. எனக்கு அதுக்குப் பொறுமை
கிடையாது. '' என்றான்.
'' அதனால் தான் என்னைப் பார்த்து பதட்டப்படலை நீ '' என்ற
வர், '' நான் சொல்லப்போறதைக் கவனமா கேட்டுக்கோ கந்தசாமி.
இப்போ நான் உன்னையே சரணம்னு வந்திருக்கேன். அடைக்கலம்னு

பரம எதிரியே வந்தாலும் ஆதரிக்கிறது தான் மனுஷ தர்மம்.'' அவர்
பேசப்பேச கந்தசாமி சிக்குண்ட நூல் கண்டு போலானான். ஒன்றும்
புரியாது அவரையே பார்த்தான்.

''கந்தசாமி என்னை இப்ப போலீஸ் தேடிக்கிட்டு இருக்காங்க!
சங்கராபுரத்துல நீ தரிசனம் பண்ணி நல்லா இருக்குன்னு சொல்லி
மாய்ஞ்சுபோனியே அந்த நடராஜா சிலை... இப்ப அது அங்க இல்லை.
அந்த விவகாரத்துல பகவான் என்னை சிக்க வெச்சுட்டான்பா.''

முதல் தடவையாக குதிங்காலை நண்டு பிடிச்ச அதிர்ச்சி கந்தசா
மிக்கு ஏற்பட்டது. சிவப்பிரகாசம் தொடர்ந்தார்.

''பத்தாததுக்கு என் மாப்பிள்ளை வேற என் கைப்பட்டுச் சாகும்
படி ஆயிடுத்து! சுருக்கமா சொல்லப்போனா ஒன்பது கிரகங்களும்
உருட்டி விளையாடற ஒரு பந்தா நான் இப்ப ஆயிட்டேன். எப்பவோ
உயிர் போயிருக்க வேண்டியது போகாம இருக்குன்னா அதுக்கு கார
ணமிருக்கு.''

கந்தசாமியின் விழிகள் ஏகத்துக்கு விரிந்து விட்டிருந்தன.

''சாமி நீங்களா என்னால நம்ப முடியலை சாமி. எந்த அறிமுக
மும் இல்லாம அனாதையா நின்ன என்னை ஒரு பய கூட கண்டுக்
காம போனப்ப வாரி அணைச்சுக்கிட்டிங்களே! அப்படிப்பட்ட உங்க
ளுக்கா இம்புட்டு சிக்கல்?'' நெகிழ்வோடு கேட்டான் கந்தசாமி.

''கர்ம வினைன்னு ஒண்ணு உண்டுப்பா. அதுக்கு நல்லவன் கிடை
யாது. கெட்டவன் கிடையாது. மகாராஜன் நளனையே காட்டுக்கு
அனுப்பின சத்ய வினைப்பா அது. இது என் பூர்வ ஜென்ம பாவம்.
யாரையும் காரணமாக்க முடியாது.''

''இதுமாதிரி பேச்சுதான் எனக்கு ஒத்துக்கிறதில்லை சாமி. சரி நீங்க
விபரமாச் சொல்லுங்க. நான் என்ன செய்யணும்?''

தான் எதிர்பார்த்த 'நான் என்ன செய்யணும்' எனும் கேள்வியை
இறுகப்பிடித்துக் கொண்டார் சிவப்பிரகாசம்.

''நீ மட்டும் நான் கேக்கற உபகாரத்தைப் பயப்படாம கர்ம சிரத்
தையா செஞ்சா எனக்கு நல்ல பேருங்கிறதை விட சங்கராபுரம் நடரா
ஜனுக்கு நீ செய்யற கைங்கர்மாய அது இருக்கும்பா. ஒரு கோயில் கட்
டின புண்ணியம் உன்னைச் சேரும்.''

''செய்யறேன் சாமி, விவரமா சொல்லுங்க.''

''காசு பணத்துக்கு ஆசைப்பட்டு என்னை போலீஸ்ல நீ காட்டிக்
கொடுத்தாலும் கவலையில்லை. இந்த உபகாரத்தை மொதல்ல செஞ்
சுரு. செத்த பிறகும் என் ஆத்மா உன்னை வாழ்த்த தவறாது.''

''விபரத்தை சொல்லாம ஏதேதோ பேசறீங்களே! பணம் காசுக்கு
ஆசைப்படறவன் இல்ல சாமி இந்த கந்தசாமி. உங்க உபகாரத்தால
தான் பைத்தியம் பிடிச்சு அலையாம இன்னிக்கு ஒழுங்கா உக்காந்து
வியாபாரம் பண்ணிப் பொழப்பு நடத்திக்கிட்டு இருக்கேன். அத நான்
மறந்துடலை. அந்த முருகன் சன்னதி வாசல்ல அவன் வேல் வச்சிருக்
கிற பக்கமாக குந்தி இருக்கிறவன் நான். ஆருக்கு அபயப்
படாட்டியும் அதுக்கு பயப்பட்டு நடக்கணுமில்லையா? நீங்க தைரி



யமா சொல்லுங்க. முருகன் இருக்கான்.''

அப்போது மீண்டும் மணியோசை துளிர்த்து அடங்கியது. தெம்
புக்கு வந்தவராக நினைவுகளில் கொஞ்சம் பின்னால் போனார் சிவப்
பிரகாசம்.

உதய மார்கழியின் ஊசிப் பனி அன்றைக்கு சிவப்பிரகாசத்தை அதி
கமாகவே படுத்தி விட்டது. உடம்பு பனியோடு சண்டை போட்டுக்
களைத்துக் கணகணவென்று காய்ச்சல் கூட்டுக்கு வந்து விட்டிருந்தது.

''ஏன்டா இந்த உடம்போட கைங்கர்யம் பண்ணித் தான் தீர
ணுமா? பேசாம படு. ரெண்டு நாளைக்கு கோயில பிள்ளையார்கோ
வில் சாம்பு சாஸ்திரிகள் பார்த்துக்கட்டும். தர்மகர்த்தாவைப் பார்த்து
நான் விவரத்தைச் சொல்லிவிட்டுவரேன்.''

வேகத்தோடு கிளம்பின ரங்காவை அதிக வேகத்தோடு தடுத்தார்
சிவப்பிரகாசம்.

''அக்கா வேண்டாம். சொன்னாக் கேளு! சாதாரண காய்ச்சல் தான்
இது! சரியாப் போயிடும். நீ சுக்கு கசாயம் போட்டுக் கொடுக்கா''

''எப்பேர்ப்பட்ட மாசமிது? ஆருத்ரா தரிசனத்துக்கு என்னப்பன்
நடராஜன் தயாராயிண்டிருக்கறச்சே... உடம்பு மருந்துன்னு நான் படுக்
கலாமோ?''

பேசிக்கொண்டே பரவசமானார் சிவப்பிரகாசம்.

''அது சரிடா. சுவர் இருந்தாத் தான் சித்திரம் எழுத முடியும். கொற
நாள் நிறைய இருக்கு. அதுலையும் கைங்கர்யங்கள் நடத்த வேண்டி
யிருக்கு. உடம்பைக் கெடுத்துக்காம சொல்றதைக் கேளு.''

''வேண்டாம்க்கா. எனக்கு ஒண்ணுமில்லை. இன்னிக்கு நான் கட்
டாயம் கோவிலுக்குப் போயாகணும். அந்த சன்னதி ஒண்ணு தான்
எனக்கு நிம்மதி. என் நிம்மதியைக் கெடுத்துடாதே.''

''என் பொண்ணு இன்னொரு இடத்துல இதைவிடக் கொடு
மையை தேகவதை பட்டுண்டு இருக்கறச்சே நான் இதப் பொருட்ப
டுத்தலாமா? அந்த நடராஜன் கூட இன்னைக்கு நிறைய பேச வேண்
டியிருக்கா... சரணம்னு காலை வந்து கட்டிண்ட மார்க்கண்டேயனுக்கு
தான் உன் அருளா? நேக்கெல்லாம் கிடையாதான்னு நான் கேக்க
ணும்கா''

குரலில் உடைந்து குமுறலில் விழுந்து விட்டார் சிவப்பிரகாசம்.

அதற்கு பிறகு ரங்காவால் கூட பேசமுடியவில்லை.

''பாவிப் பொண்ணு கிளி மாதிரி வளர்த்தேன். குரங்கு கையி
லன்னா ஒப்படைக்கும்படி ஆயிடுத்து! ஆண்டவா... உன் படைப்புல
ஏன் இத்தனை கொடூரம்? ஒருத்தன் தன்மையா இருந்தா, இன்னொ
ருத்தன் அரக்கனா இருக்கானே... எல்லோரும் நல்லபடியா இருந்தா
என்ன கேடு?'' தன் உரிய எதிர்பார்ப்பை அப்பாவித் தனமாகக் கலக்
கத்தோடு வைத்த ரங்காவை கலங்கின விழிகளோடு பார்த்தார் சிவப்
பிரகாசம்.

''காசும் பணமும் இந்த உலகத்துல பிரதானமாகிண்டு வர்றதுக்கா...
இங்கே மனுஷமும், தெய்வீகமும் தேயறதைப் பார்க்கச்சே பத்திண்டு

எரியறது என் வயிறு.
எந்த மகான் பொறந்து வந்து இந்த குறைகளை விலக்கப் போறாரோ
தெரியலை. அது வரைக்கும் நம்பள மாதிரி மனசாட்சியுள்ள நடுத்தர
வர்க்கங்கள் ஊசலாடித் தான் தீரணும். ''
'' ஏண்டா உன் தலையை அடமானம் வெச்சாவது ஒரு பத்தாயிரத்
தைப் பொறட்டி அவன் மூஞ்சியில விட்டெறிஞ்சுட்டு வாயேன். இந்
தப் பணந்தானே என் பொண்ணு வாழ்க்கையை குத்திக் கிழிச்சுண்டு
இருக்கு... ''
'' எங்கக்கா போவேன்? இந்தக் குருக்கள் தட்டேந்தற ஒரு சன்னி
யாசிக்கா! தெரியாத்தனமா குடும்ப பந்தத்துல விழுந்து தள்ளாடு
றேன்.''
'' தர்மகர்த்தாவைப் பார்த்துக் கேட்டுப் பாரேன். ''
'' பெத்த பிள்ளையை நம்பாத உலகம்கா இது. பத்தாயிரத்தை
எதை நம்பித் தருவா? அப்படியே தர உடன்பட்டாலும் தரக்கூடிய சக்
தியில கோயில் இல்லக்கா. இப்பல்லாம் கோயில் உண்டியல் ரொம்
பறதில்லை! தர்மம் பண்ற அளவுக்கு வெளிய யார் கையிலையும்
தாராள நிலை கிடையாது. எல்லாம் நாகரீக காலத்தோட போக்கு...''
அப்பொழுது பார்த்து அறிமுகமே இல்லாத ஒரு நபர் அங்கே வந்து
கதவோரம் நிற்க சிவப்பிரகாசம் தன் கவனத்தை அந்த நபரை நோக்
கித் திருப்பினார்.
'' நீங்க தான் கோயில் குருக்களா? '' அந்த நபர்.
'' ஆமா நீங்க யாரு? ''
'' நாங்க வெளியூர். சுவாமி தரிசனம் பண்ண வந்தோம். கோயில்
நடை சாத்தியிருக்கு. தங்கியிருந்து தரிசனம் பண்ணிப்போக அவகா
சம் இல்லை. இந்த நடை திறக்க முடியுமா? ''
'' அதுக்கு எனக்கு அதிகாரம் கிடையாது. தர்மகர்த்தா சொன்னா
செய்யலாம். ''
'' அவர் சொல்லித்தான் வந்திருக்கோம். ''
'' அப்படியா அவர் எங்கே? ஏதாவது சீட்டு கீட்டு எழுதிக் கொடுத்
தாரா?''
'' உம் '' சீட்டைக் காட்டினார் வந்த நபர்.
'மேற்படி கடிதம் கொண்டு வரும் நபர்களுக்கு சுவாமி தரிசனம்
செய்து அனுப்பவும்.
தர்மகர்த்தா,
அருணாசலம்.
-கோவில் முத்திரையுடன் கூடிய அந்தச் சீட்டும், கையெழுத்தும்
சிவப்பிரகாசத்துக்கு மிகப் பரிச்சயமானவை தான். உடன் அவர்களைத்
தொடர்ந்தார். வழியில் அந்த நபர் வித்தியாசமாகவே சில விபரங்க
ளைக் கேட்டான்.
'' நாங்க சிங்கப்பூர். இந்தக் கோயில் நடராஜர் பற்றிக் கேள்விப்
பட்டிருக்கோம். இதை திருடப் பார்த்தாங்களாமே... நெஜமா? ''
சிவப்பிரகாசம் ஆர்வத்தோடு பதில் சொன்னார்.



'' ஆமாமா... சிவன் சொத்து குலநாசம்னு தெரியாம கைவைக்கப்
பார்த்தா அந்த பரமேஸ்வரனே அவாளைப் பிடிச்சுக் கொடுத்துட்டான்.''
'' எப்படி? ''
'' இதெல்லாம் எதுக்கு கேக்கறேள்? ''
'' ஒரு ஆர்வம் தான். நாங்க சிங்கப்பூர்ல பத்திரிகைத்துறையைச்
சேர்ந்தவங்க. இந்த மாதிரி விறுவிறுப்பான விஷயங்களை தெரிஞ்சுக்
கிட்டா சுவாரஸ்யமான கட்டுரை எழுதலாமில்லையா? ''
'' அப்படியா? தர்மகர்த்தாவுக்குத் தெரியுமே... அவரண்டையே
நீங்க கேட்கலாமே? ''
-அந்த நபர் கொஞ்சம் தயங்கிய அந்த வேளையில் கோவில் வாசல்
வந்து விட்டது. ஓங்கி வளர்ந்து நிற்கும் வில்வ மரங்களும், வேப்ப மரங்
களும் சூழ்ந்த அந்தப் புராதன ஆலயம் அந்த நண்பகலில் ஆள் அரவ
மற்று கிடந்தது.
வெளிப் பிரகாரத்து சிதிலத்தில் 'நாணி' படுத்தான். பேச வராத அந்த
ஊமை அனாதைக்கு சிவப்பிரகாசம் தான் அப்பா, அம்மா எல்லாம்!
திருமஞ்சனத்துக்கு நீர் இறைப்பதில் இருந்து பூக்கட்டுவது, மணி
அடிப்பது, உற்சவ நாளில் சுவாமி பல்லக்கு தூக்குவது என்று சர்வமய
வேலைகளையும் செய்வான். அவன் படுத்துக் கிடக்கும் அந்த பிரகா
ரத்தில் வாட்ட சாட்டமாய் நாலு பேர் உட்கார்ந்து கொண்டிருந்தனர்.
சிவப்பிரகாசம் வருவது பார்த்து எழுந்தார்கள்.
விரல்களில் தங்கமும், பவழமும் மின்னி அவர்களின் பணத் தெம்
புக்கு பரிவட்டம் கட்டியது.
சிவப்பிரகாசம் வந்த வேகத்தில் நடையைத் திறக்காமல் கிணற்ற
டிக்குப் போய் நீரை இறைத்து கால்களைக் கழுவ ஆரம்பித்தார்.
ராட்டினம் போட்ட கிரீச், கிரீச் சப்தம் கேட்டு 'நாணா' எழுந்து
கொண்டான். சிவப்பிரகாசத்தைப் பார்த்து விட்டு ஆச்சரியத்தோடு
அவரை நெருங்கினான்.
அதே வேளையில் வந்திருக்கும் நால்வரில் ஒருவன் பையைத்
திறந்து காமிராவை வெளியே எடுத்தான்.
நாணா, சிவப்பிரகாசத்தோடு ஒரு மௌனப் பிரதிவாதத்தை சைக
கள் மூலம் நிகழ்த்திக் கொண்டிருந்தான். இருவருமாகத் திரும்பும்பொ
ழுது காமிரா மூலம் ஒரு கிளிக்!
சிவப்பிரகாசத்துக்கு அவனது அந்தச் செய்கை என்னவோ செய்தது.
நாணா துள்ளிக் குதித்தான். ''தன்னையும் புகைப்படம் எடுக்க ஒரு
வரா?'' அவனுக்குள் ஆச்சர்யம்.
'' எதுக்கு என்ன போட்டோ பிடிச்சேள்? இங்க எதையும்
போட்டோ பிடிக்கக் கூடாது. தர்மகர்த்தாவுக்குத் தெரிஞ்சா கேமிரா
வைப் பிடுங்கி வெச்சுடுண்டுவார்.''
கொஞ்சம் நிதானமாகவே தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.
'' தெரிஞ்சாத்தானே? '' என்று ஆரம்பத்தில் வழுங்கிவிட்டு,
'' பத்திரிகையில் விபரமா போட்டோவோட எழுதினாத்தானே
நல்லா இருக்கும். '' என்று நிமிர்ந்தான் அவர்களில் ஒருவன்.

சிவப்பிரகாசத்துக்கு கொஞ்சம் என்னவோ போல் ஆனது.

'' ஈஸ்வரா? '' என்றபடி நடைக் கதவை திறந்து உள்ளே நுழைந்தார். நீண்ட பிரகாரத்தில் நடந்து அர்த்த மண்டபத்திற்குள் நுழைந்து மூலவராக உள்ள காசிலிங்கத்தை அவர் எட்டியபோது மூலவருக்கு இடப்பக்கத்தில் நிற்கும் ஐம்பொன் நடராஜரையே வந்தவர்கள் பார்த்தபடி நின்று விட்டிருந்தனர்.

சட்டென்று ஒருவன் பிளாஷ் காமிராவால் நடராஜரைத் தன் காமிராவுக்குள் சுருட்டப் பார்த்தான். தட்டி விட்டது ஒரு கை!

அது நாணா!

அதைப் பார்த்துவிட்டு சிவப்பிரகாசம் கூட வேகவேகமாக வெளியே வந்தார்.

'' என்ன இது? ''

''செத்த முந்தி தான் சொன்னேன் போட்டோ பிடிக்கக் கூடாதுன்னு கேட்காம போட்டோ பிடிச்சா என்ன அர்த்தம்? '' கடூரமாகவே கேட்டார்.

அவர்கள் அப்படியே அடங்கி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு மூலவரை நெருங்கி விட்டார்கள்.

பேருக்கு வணங்கி விட்டு வெளியே வந்தார்கள். தட்டில் ஐம்பது ரூபாய் போட்டிருந்தார்கள்! சிவப்பிரகாசம் ஆச்சர்யமும் அதிர்ச்சியுமாய்ப் பார்த்த பார்வையை ஒருவரும் சட்டை செய்யவில்லை.

பிரகாரத்தை, அதன் அமைப்பை, சூழ்நிலையை அணு சுத்தமாய் அளப்பதில் அவர்கள் பார்வை ஈடுபட்டிருந்தது.

கோயிலுக்கு வெளியே வந்தபோது ஒருவன் கொஞ்சம் கோபமாகவே பேசினான்.

'' கிழவன் பெரிய அகராதியா இருக்காம்பா. போட்டோ பிடிக்கிறதே பெரும்பாடுன்னா மத்ததுல்லாம் ''

'' நீ ஒருத்தன் எதுக்கு இந்த நேரத்துல வந்தோம்? கூட்டம் இருக்காது. மளுக்குன்னு காரியத்தை முடிச்சுக்கலாமுன்னு தானே? பட்டு பட்டுன்னு எடுத்துத் தள்றதை விட்டு பிட்டு நிதானமா 'வியூ'' பார்த்தா இப்படித்தான் நடக்கும்.

-மறுப்பு சொன்னான் இன்னொருத்தன்.

''இப்பவும் ஒண்ணும் காரியம் கெட்டுடலை. ஆயிரம் ஐநூறு செலவானாலும் கிழவனை மடக்கி போட்டோவை சீக்கிரமா எடுத்தே தீரணும். துளிக்கூட நமக்கு அவகாசமில்லை.

நல்ல வில் தராசைக் கொண்டு வெயிட்டையும் எவ்வளவுன்னு பார்த்துடணும். அகல உயரங்கள் அனுமானமா தெரிஞ்சாப்போதும்.''

அவர்கள் பேசும் அந்த வேளையில் வில்வமரத்தில் ஒரு கழுகு முனங்கலோடு சிறகை விரித்துக் கொண்டு வானம் பார்த்து மேலேறியது.

உடற்களைப்போடு இப்பொழுது மனக்களைப்பும் சேர்த்து விட்டிருந்தன. ''யாரு இவா? பார்வையே சரியில்லையே... ஈஸ்வரா!'' கேள்வியோடும், கருத்தோடும் கோயில் நடையைச் சாத்திக்கொண்டு



வெளியே வந்தபோது 'நாணா' அவரைக் கொஞ்சம் பரிதாபமாகப் பார்த்தான்.

'' என்ன நாணா? '' ஆதுரத்துடன் கேட்டார்.

'' பசிக்கிறது '' வயிற்றைத் தடவி தன் உணர்ச்சியை வார்த்தைப்படுத்த முயன்று தோற்றான்.

'' ஆத்துக்கு வா. ரங்காவைச் சாதம் போடச் சொல்றேன். '' அவர் களைப்போடு முகம் துடைத்து நடக்க அவன் பின் தொடர ஆலயத்துப் பின்புறக் காவேரியை நோக்கி ஒரு கூட்டம் ஓடிக் கொண்டிருந்தது.

'' என்னவாம்? ''

'' புதுத்தெரு நடுவீட்டு அம்மணிப்பாட்டி ஆத்துல குதிச்சுட்டாளாம். ''

'' என்னது அம்மணியா, இந்த வயசான காலத்துல இவ புத்தி ஏன் இப்படிப் போச்சு! அந்த அளவுக்கு என்ன சங்கடம்? '' பதட்டத்தோடு கேட்டார் சிவப்பிரகாசம்.

'' ஆருக்குத் தெரியும்? ஏதோ காசிக்குப் போகணும் கங்கையில மூழ்கணும், காசைக் கொண்டா பணத்தைக் கொண்டானு பிள்ளையை ஒரு மாசம் அனத்தியிருக்கு கிழடு. பிள்ளை சட்டை செய்யவில்லை. கங்கையில தான் மூழ்கிட முடியலை. காவேரியிலயாவது மூழ்கிடலாம்னு தான் மூழ்கிடுச்சு '' பதில் சொன்னவர் பார்வை காவேரிக்குச் செல்லும் பாதையிலேயே இருந்தது.

'' உடம்பு கிடைக்கலை. ஆத்துல தண்ணி ரொம்ப வீச்சலான்னா போயிண்டிருக்கு. கல்லணைக்குப் போய்த் தேடினாக் கிடைச்சுடும். ஆனா அதுக்குள்ற மீனுகளே அந்தக் கிழட்டு உடம்பைத் தின்னு தீர்த்தாலும் தீர்த்துடும். ''

அனுபவபூர்வமாக ஒருத்தி பேசினது சிவப்பிரகாசத்துக்கு அடித்துப் போட்டது போலானது.

அப்படியே கோயில் கோபுரத் திண்ணையில் உட்கார்ந்தார்.

''ஏன் சுவாமி அசந்துட்டீர்?''

''நம்ம ஊர்க்கு அடிச்சுண்டு போற சமாசாரம் புதுசா என்ன? இதுக்கு முந்தி இளசுகளா ஆத்துல போனதுகள்! இந்தத் தடவை ஒரு கிழடு போயிருக்கு. அவ்ளோதானே வித்தியாசம்!''

-ராஜகோபாலன் என்னும் சிவப்பிரகாசத்தின் நட்புக்குட்பட்டவர் அசிரத்தையாக பேசப்பேச சிவப்பிரகாசத்துக்கு அடித்துக் கொண்டு அழ வேண்டும் போலத் தோன்றியது.

''ஆத்ம ஹத்திங்கற தற்கொலை, படுபாவமான சமாச்சாரம் தெரியுமா ராஜகோபாலா? அத ஒரு கஷ்ட விடுதலைன்னு நினைக்கறதைப் போல முட்டாள்தனம் ஏதுமில்லை... எவ்ளோ கஷ்டம்னாலும் அவன் பேரைச் சொல்லிண்டே சமாளிச்சுடணும், கஷ்டங்கறது தானா வர்றது கிடையாது. நாமா உண்டு பண்ணிக்கறது! ஒரு தப்பைத் தெரிஞ்சோ தெரியாமலோ பண்ணினாத்தான் கஷ்டம் நம்மளை நிழல் மாதிரி துரத்திண்டு வரும். அது இந்தப் பொறப்பா இருந்தாலும் சரி, பூர்வ ஜென்

மமா இருந்தாலும் சரி, வர்ற கஷ்டங்களையெல்லாம் மாலையா
நினைச்சு வாங்கிப் போட்டுண்டனும்...''

-சிவப்பிரகாசம் அந்த வேளையில், அந்தச் சஞ்சலத்தில் தனக்குத் தோன்றியதை எல்லாம் சொல்லிக்கொண்டு போனார். கேட்கத்தான் 'நாணா'வைத் தவிர யாருமில்லை. ராஜகோபாலன் ஆர்வத்துடிப்போடு காவேரியைப் பார்க்கப் போயிருந்தார்...

இப்பொழுது நாணா மனத்தில் ஒரு புதுக்கேள்வி.

''காசியும், கங்கையும் அந்தக் கிழவிக்குத் தனது உயிரை விட அத்தனை பெரிதாகத் தோன்றக் காரணம்?''

-எப்படிக் கேள்வியை வார்த்தைப்படுத்துவது? கொஞ்சம் தடுமாறிப் போய் பிறகு பக்கமாகக் கிடந்த கரித்துண்டை எடுத்துத் தரையில் எழுதிக் காட்டிக் கேட்டார்.

விச்ராந்தியாய்ச் சிரித்தார் சிவப்பிரகாசம்.

''உடம்புல எத்தனையோ உறுப்புகளிலிருக்கலாம் நாணா, ஆனா அத்தனையும் கண்ணாகுமோ? அதுமாதிரித் தான் காசியும், கங்கையும்! ஆத்மா அந்த இரண்டைக் கொண்டு தான் கடவுளைப் பார்க்கிறது. அந்த இரண்டுக்கும் நல்லவன் கெட்டவன் கூற பேதம் கிடையாது... அங்க போற எல்லாருமே புனிதமாயிடுவா! அப்புறமா பிறப்பு கிடையாது! இறப்பு கிடையாது! கஷ்டம் கிடையாது! போராட்டம் கிடையாது... எனக்கும் அந்த விஸ்வநாதனைப் பார்க்கணும், கங்கையில மூழ்கணும்கற தாகம் நிறையவே உண்டு. ஆனா வாய்ப்புத்தான் இன்னமும் வரலை. என்னிக்கு இந்த நடராஜன் என்னை அங்க அனுப்பப் போறானோ?''

-பேசிக் கொண்டே எழுந்து நடக்க ஆரம்பித்தார் அவர்.

ரங்கா வாசல் வராண்டாவில் மருகிப்போய் உட்கார்ந்திருந்தாள். உள்ளே நுழைந்த சிவப்பிரகாசத்தை ஆதூலத்தோடு பார்த்தாள்.

''ஏன்கா ஒரு மாதிரி இருக்கே? நாணா வந்திருக்கான், அவனுக்குச் சாதத்தைப் போடு பசிக்கறதாம்''- பேசிக் கொண்டே தரையில் துண்டை விரித்துச் சரியப் போனவரை ரங்கா அசராமல் பார்த்தாள். பேசினாள்...

''என் சிநேகிதி அம்முணி ஆத்தோட போயிட்டாளாமே... நிஜமாவா... சிவா?''

சிவப்பிரகாசத்துக்குக் கொஞ்சம் துணுக்கென்றானது. பதில் பேசாமல் பார்த்தார்.

''எனக்கு அவ போனதுல கூட வருத்தமில்லை சிவா. வயசானவ! உன் பொண்ணும் அதுமாதிரி நானும் போயிடப்போறேன்னு சொல்லி வந்து நின்னுண்டிருக்காடா...''

- விதிர்த்துப் போய் நிமிர்ந்தார் சிவப்பிரகாசம்.

''மாப்பிள்ளைக்கு உடனே வரதட்சணைப் பாக்கி வேணுமாம். குறைஞ்சபட்சம் இரண்டாயிரமாவது வரலைன்னா ஆத்துப்பக்கம் வராதேன்னு அடிச்சு விரட்டியிருக்கான். உள்ள இருக்கா... போய்ப்பாரு..''

பூஜை அறையில் அம்பாள் படத்தின் முன் கண்ணீர்மல்க மௌன



மாகப் பிரார்த்தனையில் மூழ்கிவிட்டிருந்தாள் வித்யா.

''வித்யா..'' - சிவப்பிரகாசத்தின் உடைந்த குரல் அவளைத் திருப்பியது.

''அப்பா...'' எழுந்து வந்து சிவப்பிரகாசத்தின் மார்பில் சாய்ந்து வெடித்தாள்.

''அப்பா.. உடனே எப்படியாவது ஒரு இரண்டாயிரத்தை புரட்டிக் கொடுங்கோ. இல்லைன்னா அவர் என்னைத் தள்ளிவெச்சுடுவேன்னு சத்தியம் பண்ணிட்டார்ப்பா. அவருக்கும் தீர்க்க முடியாத பணச்சிக்கல்?''

''ஆயிரக்கணக்குல சம்பாதிக்கற அவருக்கு அப்படி என்னம்மா ரெண்டாயிரத்துல சிக்கல்'' - மிக்க நிதானத்தோடு தலையை வருடிக் கொண்டே கேட்டார் சிவப்பிரகாசம்.

''அவருக்கு என்னைப் பிடிக்கலை. அவர் பணக்காரப் பெண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டிருக்கார்! அவராத்துல பணம் இருந்தா குணம் இருக்காதுன்னு நினைச்சி நம்ப கிட்ட சம்பந்தம் வெச்சிண்டுருக்கா.

இவர் கொஞ்சம் ஊதாரி. வருமானத்துக்கு மேல செலவு பண்ணிக் கடனாயிடுத்து. அவர் அப்பாவோ.. கஷ்டப்படு. காசுதர மாட்டேன். அப்பத்தான் நீ திருந்துவேங்கறார். இவரோ என்னைக் கொண்டு கரையேறப் பார்க்கறார். அடி உதை தாங்கலைப்பா... இந்த மாதிரி நாழியில கூட உங்கப்பன் அந்தப் பணத்தைத் தராம இருந்தா அவன் என்ன எனக்கு மாமனார்? நான் என்ன மாப்பிள்ளைன்னு கத்தறார்...''

''உன் மாமானார் என்ன சொன்னார்?''

''என்கிட்ட வராதே. எக்கேடுங் கெட்டுப்போன்னு விட்டுட்டார்...''

''நல்ல பொறுப்பான தகப்பனார்மா அவர்...'' - கருத்தோடு வழியும் கண்ணீரைச் சிவப்பிரகாசம் துடைத்த போது இடைவெட்டிக் கொண்டு வந்தாள் ரங்கா.

''அவர் பொறுப்பைப் பத்தி நாம யாருமா விமர்சிக்க? பத்து விரலும் ஒண்ணாவா இருக்கு? இப்படித்தான் வாழணும்னு எத்தனை வேதம் சொன்னாலும் ஒருத்தர் ரெண்டு பேர் எப்படியும் வாழத்தான் செய்வா. அப்பத்தானே நமக்கும் சத்தியத்தோட அருமை தெரியும். நீ முதல்ல அவ கோரிக்கைக்கு வழியப்பாரு. இல்லைன்னா, இவளையும் அந்தக்காவேரி தனக்குத் துணையா கூட்டுண்டு போயிடுவாடா..''

ஓங்கலாகவே இறுதி வரிகளைச் சொன்னாள் ரங்கா.

''பணத்துக்கு எங்கே போக?''

சிவப்பிரகாசம் பாரத்தோடு சரிந்த போது ஊடே 'மா ஆ ஆ' என்று கொல்லையின் செல்லப்பசு 'நான் இருக்கேன்' என்பது போல் கத்தியது.அவசர விற்பனையில் அது ஆயிரத்து ஐந்நூற்றுக்கு மேல் மதிப்பாகவில்லை. அதற்கே உன்னைப் பிடி என்னைப் பிடி என்று ஆகிவிட்டது.

''சொச்சம் ஐந்நூறுக்கு எங்கே போக?''

''எங்கு போக?''

4

ஆருத்ரா தரிசனத்தில் நடராஜரோடு அமர்க்
களமாக வீதிகளைச் சுற்றிவந்ததிலும் விடிய விடிய
கண் விழித்துப்பட்டி தொட்டி மக்களுக்கெல்லாம்
'பிரசாத மை' தந்ததிலும் மேலும் ஒரு நூறு
தொகை காணிக்கையாகத் தட்டில் விழுந்து கூடி
யது.

அப்படியும் நானூறுக்கு வழி தேட வேண்டிய
நிலை. மறுநாளே விசேஷ நாளின் கோலாகலம் கரைந்துவிட்டது.
உச்சி வெயிலின் போது வழக்கம் போல நடையை மூடப்போனார்
சிவப்பிரகாசம்.

பழைய படி அந்த நான்குபேர்.

''வணக்கம் சாமி...'' கம்பீரமாக அறிமுகமாகினர்.

''கொஞ்சம் முந்தி வந்திருக்கலாமே! நடை சாத்தப்போற இந்த
நாழில!'' சிவப்பிரகாசம்.

''எப்படியோ தாமதமாயிடுச்சி. கொஞ்சம் தயவு பண்ணுங்கோ.''

மறுபடியும் அவசர அவசரமாக நடையைத் திறந்தார்.

''நீங்க சிங்கப்பூர்னு சொன்னேளே: இன்னும் ஊருக்குப் போக
லையா?''

''இல்ல சாமி. அடுத்த வாரம் போகலாமுன்னு.. நீங்க அர்ச்சனை
பண்ணுங்க. என் பேரு சந்திரன். இவன் பேரு முத்து அவன் பேரு
காளி, அதோ அவனோட பேரு ஜோசப்..''

''ஜோசப்பா?'' ஆச்சரியத்தோடு தலையை உயர்த்திய வரை ஜோசப்
புன்னகையோடு பார்த்துப் பேசினான்.

''நான் கிறிஸ்தவனா பொறந்துட்டாலும், நடராஜ பக்தன் சாமி. அதி
லும் இந்தக் கோயில் சாமின்னா எனக்கு ரொம்ப இஷ்டம். சக்தியுள்ள
தெய்வமாச்சே!''

சிவப்பிரகாசம் அவன் பதிலால் அகமகிழ்ந்து போயிருந்தார். சந்
தோஷத்தோடும், உற்சாகத்தோடும் அவர் அந்த அர்த்தமண்டபம் தாண்
டிச் சந்நிதிக்குள் நுழைந்து அர்ச்சனை நாமாவளியில் கலந்த போது,
இடப்புற ஐம்பொன் நடராஜரைச் சட்டென்று காமிராவில் அடக்கி
னான் காளி. பிளாஷ் வெளிச்சம் வெளியே இருந்த நாணாவின் கவ
னத்தைத் திருப்பியது.

அவன் ஆச்சரியத்தோடு பார்த்த போது சிவப்பிரகாசம் அர்ச்சனை
முஸ்தீப்பில் இருப்பது தெரிந்தது. ஒன்றும் புரியாமல் நின்றான். சிவப்
பிரகாசம் அர்ச்சனை முடிந்து வந்து கற்பூரத் தட்டை நீட்டிய போது
சுளையாக ஐந்நூறு ரூபாயை வைத்தனர்.

திகைத்துப்போனார் சிவப்பிரகாசம்.

''என்னத்துக்கு இவ்வளவு பணம்?''

''உங்களுக்குத்தான்'' கற்பூரத்தை ஒத்திக் கொண்டே கூறினான் சந்
திரன்.

''அர்ச்சனைக்கு ஐம்பது காசுதான். அதுவும் நீங்க இஷ்டப்பட்டா





தான்.''
''ஐந்நூறு தரக்கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்காசாமி?''
பட்டென்று கேட்டான் முத்து.
சிவப்பிரகாசம் தடுமாறினார்.
''சாமி நாங்க இருக்கப்பட்டவங்க. கொடுக்கிறோம் வெச்சிக்குங்க.
இதெல்லாம் ஒரு வகை தர்மம்.''
''அப்படின்னா இந்தப்பணத்தை உண்டியல்ல போட்டுடுங்கோ
திருப்பணிக்கு உதவியா இருக்கும்.'' உதடு பேசினாலும், உள்ளம் வித்
தியாவின் பிரச்சனையைத் தீர்க்கத் தெய்வமாகச் செய்யும் உதவி என்று
நினைத்தது. வெளியே நின்ற நாணாவுக்கு எல்லாமே ஆச்சரியமாக
இருந்தது என்ன பேசுகிறார்கள் என்பது விளங்கவில்லை. ஆனால் விவ
காரமின்றி யதார்த்தமாக, இயல்பாக பேசிக் கொள்கிறார்கள் என்பது
அர்த்தமாகிக் கொண்டிருந்தது.
''உண்டியலுக்குத் தனியா கொண்டு வந்திருக்கோம். ஐயாயிரத்தை
நன்கொடையாகக் கொடுக்கப்போகிறோம். இல்லைன்னா ஏதாவது
பொருளா வாங்கித் தந்துடலாம்னு''
சிவப்பிரகாசம் துள்ளிக் கொண்டு பேசினார்.
''அப்படீன்னா இந்த நடராஜர் சந்நிதிக்கு ஒரு ஸ்ட்ராங்கான
இரும்பு கேட் போட்டுடுங்கோ.''
''ஏன் இப்ப இருக்கற கேட்டுக்கு என்ன?''
''இதுவும் ஸ்ட்ராங்தான். இன்னும் ஸ்ட்ராங்கா இருந்தா நல்லது
தானே?''
''அப்படி என்ன சாமி இந்த நடராஜர் கிட்ட விசேஷம்?'' மெல்ல
விஷயத்துக்கு வந்தான் சந்திரன்.
''ஐம்பொன் விக்கிரகம் இது. ரொம்பப் பழமையானது! உக்கிரப்
பெருவழுதிப் பாண்டியன் வழிபட்ட வரலாறு இதுக்கு உண்டு. நல்ல
சரித்திரம் தெரிஞ்ச வெளிநாட்டுக்காரன் எத்தனையோ பேருக்கு இதும்
பேர்ல இன்னிக்கும் ஒரு கண்ணு உண்டு.''
''அப்படின்னா... இன்னும் பாதுகாப்பால்ல இந்த நடராஜர் இருக்
கணும். இப்ப உங்களை அடிச்சுப் போட்டுட்டு நாங்க கூட எடுத்துக்
கிட்டுப் போயிடலாம்ங்கற நிலையில்ல இருக்கு.''
சிவப்பிரகாசம் ஜோசப்பின் விஷமமான பேச்சுப் புரியாமல் வேதாந்
தியாகச் சிரித்தார்.
''வாஸ்தவம் தான். ஆனா இந்த நடராஜனை ஒரு படையே வந்தா
லும் இந்த ஊரைத்தாண்டி ஒரு அடி கொண்டு போக முடியாது. அத்
தனை சக்தி இவனுக்குண்டு. இது வரையிலும் கூட அப்படித்தான்
நடந்து வந்துருக்கு.''
''நிஜமாவா?'' ரொம்பத் தீனமாகக் கேட்டான் முத்து.
''நிஜம் இல்லப்பா, இது சத்தியம், ஒண்ணரை அடி ஒசரந்தான்.
எண்பத்தெட்டு கிலோ நிறைதான். ஆனா ஓர் உயிர் அவனைத் தீண்டி
தூக்கிட முடியாது. பூஜிக்கிறேன்னு வந்தா பொன்னாத்தருவான். மாறு
பட்ட நோக்கம் எதுவா இருந்தாலும் உடம்பு புண்ணாயிடும்.''



நான்கு பேர்களிடையே அசாத்திய மௌனம்.
சந்திரன் மட்டும் உயர அகலம் மற்றும் எடை தெரிந்த சந்தோஷத்
தில் அதைத்துல்லியமாக ஊர்ஜிதப்படுத்த மீண்டும் சிவப்பிரகாசத்தை
நிமிண்டினான்.
''சாமியைக் கூட எடை போட்டுப் பாத்திட்டீங்களா சாமி?'' கொஞ்
சம் கிண்டலாகக்கேட்டான்.
''எடை போட வேண்டிய கட்டாயத்தைக் காலம் உண்டாக்கிடுச்சு.
ஒரு தற்காப்புக்கும், பாதுகாப்புக்கும் கோயில் நிர்வாகம் இதைச் செய்
தது'' என்றார் சிவப்பிரகாசம்.
''இருந்தாலும் ஒண்ணு சொல்லிக்கிறேன். இது கம்ப்யூட்டர் யுகம்
சாமி. சர்வத்தையும் விஞ்ஞான கண்ணோட்டத்துல கூட ஒத்துக்க முடி
யாம இருக்கோம். நடராஜன் தன்னை காப்பாத்திப்பான்னு நினைச்சு
சும்மா இருந்துடாதீங்க. இல்லேன்னா நடராஜர் அமெரிக்காவுக்கோ,
ஆப்பிரிக்காவுக்கோ பறந்துடுவார். ஒரு தரம் அப்படிப் பறந்தா தான்
நீங்களும்மாறுவீங்க. உங்க பழம்பெட்டித்தனமான புத்தியும், பக்தியும்
கூட மாறும்.
சிவப்பிரகாசம் துணுக்குற்றார். சற்று முன் வரையில் பக்தி பழங்
களாக மின்னியவர்களின் பேச்சா இது?
''ஏன் இப்படியெல்லாம் பேசறேள்?'' கேட்டார்.
அவர்கள் பதில் சொல்லாமல் விஷமமாகச் சிரித்தனர்.
''நான் சொல்றது வாஸ்தவம்னாலும் இந்த விக்கிரகத்தைப் பாது
காக்காம இல்ல. உரிய பாதுகாப்பு இருக்கத்தான் இருக்கு. சரி, அதி
கம் பேசிட்டதா நினைக்கிறேன். பொறப்படுவமா?''
அவர்கள் வெளியே வந்தனர். சிவப்பிரகாசம் ஐந்நூறை எடுத்து
இடுப்பில் செருகும் போது நாணா வித்தியாசமாகப் பார்த்தான். சிவப்
பிரகாசம் கவனிக்கவில்லை. வீடு நோக்கிப் புறப்பட்டுப் போய் விட்
டார். அவர்களும் கோயிலுக்கு வெளியே வந்திருந்தனர்.
''தேவையான விபரம் கிடைச்சாச்சு. போட்டோவை வெச்சு ஒரு
போலி விக்கிரகத்தைத் தயாரிச்சுடலாம், ஆனா அதை இடம் மாற்றிக்
கடத்தறதைப் பற்றி இன்னும் முடிவுக்கு வர முடியலையே?''
ஜோசப் காரில் ஏறி ஸ்டார்ட் செய்து கொண்டே கேட்ட கேள்வி
யைச் சந்திரனின் சிரித்தவதனம் கேலி செய்தது.
''ஏன் சிரிக்கிறே சந்திரா?''
''நமக்கென்ன இது புதுசா? இந்த நடராஜர் நம்ம நாலாவது முயற்சி.
மத்ததை எப்படி முடிச்சமோ அப்படியே இதையும் முடிச்சிட வேண்
டியது தான்'' சந்திரன்.
''இருக்கலாம். ஆனா இத அவ்வளவு சுலபமா நான் நெனைக்
கலே.'' - முத்து.
''ஏன்?''
''அத என்னால சொல்ல முடியலை''
''அத என்னால சொல்ல முடியலை''
''அத என்னால சொல்ல முடியலை''

பட்டன. காளியே தொடர்ந்தான்.
''ஊர் ஒண்ணும் பெரிய சிட்டி இல்லை. போலீஸ் ஸ்டேஷனும்
'டம்மி' தான். போலீஸ்காரங்க மொத்தமே ஏழெட்டுப் பேர் இருக்க
லாம். பெரும்பாலும் இன்ஸ்பெக்டர் பக்கத்து டவுன் கோர்ட்டுக்குக்
கேஸ்களை எடுத்துக்கிட்டுப் போயிடுவாராம். வகையான சூழ்நிலை.
ஒரு ராத்திரி போதும். காரியத்தை முடிச்சுடலாம்... மளமளன்னு
தேதிய வையுங்க.''
''சிங்கப்பூர் போக டிக்கெட் மொதக்கொண்டு புக் பண்ணியாச்சு.
அதை மறந்துட வேண்டாம்.''
கார் காவேரி பாலத்தின் மீது விரைந்து கொண்டிருந்தது.
''கோவில்ல ஒரு ஊமைப் பையனைப் பார்த்தியா? ரொம்ப சுதா
ரிப்பா இருக்கான். தடையா வந்தா தீத்துடுவோம்?'' - இது ஜோசப்.
''வேண்டாம் வேண்டாம். இதுவரைக்கும் கொலைப்பக்கம்
போகலே. சர்வத்துக்கும் மயக்க மருந்தே போதும்.''- இது சந்திரன்.
''கொலை, மயக்க மருந்து, பூட்டை உடைக்கறது எதுவுமே இல்
லாம போலீஸோட நிழல் கூட நம்மேல பட முடியாதபடி சிலையை
இடம் மாத்த வழி இருக்கு.''
நிதானமாக ஆனால் ஆழமாகப் பேசின காளியை மூவரும் ஆச்சரி
யத்தோடு பார்த்தனர்.
''எப்படி? எப்படி? எப்படி?''
அவன் கூறி முடிக்கவும் மற்றவர் விழிகளில் ஏராளமான வெளிச்
சம்!

## 5

இரண்டாயிரத்தோடு வித்யாவை அனுப்பி
விட்டு, உள்ளே நுழைந்த சிவப்பிரகாசத்தை ரங்கா
ஏக்கத்தோடு பார்த்துப் பேசினாள்.
''என்னடா பொழப்பு இது சிவா? ஒரு வழிக்
கும், உபயோகமில்லாம. அவளை ஒனைச்சா
வயித்தக்கலக்கிறதுடா''
''பெண்ணைப் பெத்துட்டாலே சங்கடந்தான்.
''பெண்ணைப் பெத்துட்டாலே சங்கடந்தான்.
எழுதினதுதானே நடக்கும். நீ கவலையை விடு.''
எழுதினதுதானே நடக்கும். நீ கவலையை விடு.''

''நீ என்னமோ கவலைப்படாதவனாட்டம் பேசறையே. உன்
கவலை முன்னால என்னது துரும்புடா. கூடா இளைச்சுண்டு போற
உன் உடம்பு சொல்றதேடா உன் கவலையை''
''என்னக்கா பெரிய உடம்பு? இந்த சமுதாயத்துல ஏழைக்கு பெரிய
உபத்ரவமே இந்த உடம்பு தான். இது மட்டும் இல்லேன்னா பசி
யில்லை. பிணியில்லை. ஒரு சங்கடமுமில்லை.''
''என்னடா விரக்தியிலே ஒளர்றே? இது கலியுகம் சிவா. காலத்துக்
கும் ஒரு முடிவு வேண்டாமா? தாறுமாறாப் போகத் தான் செய்யும்.
நல்லதெல்லாம் கெட்டதாகவும், கெட்டதெல்லாம் நல்லதாகவும் மாறி
நம்மளை அலைக்கழிக்கும். உறுதியோட இருக்கணும்டா...''
''நான் என்ன இல்லாமலா இருக்கேன். வேற ஒருத்தனா இருந்து



ருந்தா தூக்கு மாட்டிண்டு இருப்பான். மனுஷாளவிட காசு பணம் பிர
தானமாயிண்டு வரதே அக்கா. ஒரு குணமில்லாதவன் என் மார்ப்
பிள்ளை யானதைப் பத்திக்கூட எனக்குக் கவலை இல்லை அக்கா.
நாட்டுல எத்தனை பெண்கள் இந்த மாதிரி சித்ரவதைப் படறாளோ?
அதை நெனைச்சா மலைப்பா இருக்கு. தினசரி பேப்பரைத் திறந்தா
அங்க தீக்குளிப்பு, இங்க கொலை, இங்க கொள்ளைன்னு சகிக்க முடி
யலைக்கா.''
''அதுக்குப் பேர்தான் சிவா மனிதாபிமானம். அது இருக்கறவா
ளுக்கு ஒரு குறையும் வராது. நீ சந்தியா வந்தனம் பண்ணிட்டியோ?''
பேச்சோடு சிவப்பிரகாசத்தின் நித்ய கர்மாவை நினைவுபடுத்தினாள்
ரங்கா.
''மறந்துட்டேன். தோ..'' - எழுந்திருந்து கால் கைகளைக் கழுவிக்
கொண்டு டம்ளரில் நீரோடு மேற்கு பார்த்து அமர்ந்தார் சிவப்பிரகா
சம்.
ஆசனம் முடித்து பிராணாயாமம் செய்யும் பொழுது சிவப்பிரகா
சத்துக்குள் வித்யாவின் முகம் விசுவரூபமெடுத்தது.
மேற்கொண்டு அந்தக் கர்மாவுக்குள் நுழைய மனசால் முடிய
வில்லை. தடுமாறிச் சிறிது தாமதித்து, பிறகே சந்தியா வந்தனத்தை
முடிக்க முடிந்தது.
''காயேன வாசா.. மனசேந்தரீர்வா..'' உயரிய கர்மாவின் இறுதிக்
கட்டத்தில் ஈஸ்வரனின் திருப்பாதத்தில் நீர்விட்டுக் கைகூப்பி நிமிர்ந்
தவர் எதிரே ரங்கா ஒரு சிலை போல நின்று விட்டிருந்தாள்.
''என்னக்கா? ஏன் என்னையே ஊனப்பாத்துண்டு நின்னுட்டே?
நான் சந்தி பண்றதென்ன ஆச்சரியமான விஷயமா?''
''அதெல்லாம் இல்லை சிவா. நினைவு தெரிஞ்ச நாள்ல இருந்து
ஆத்ம கர்மாவையும், தெய்வ கர்மாவையும் குறையில்லாம செய்றவன்
நீ. உன் கிட்ட ஒண்ணு கேக்கணும்னு தோணித்து. அதுக்கு இதான்
வேளைன்னு பட்டதால வந்து நின்னுட்டேன்.''
எப்பேர்ப்பட்ட கல்மனதும் சந்தியாவந்தன கர்மாவுக்குப் பின் கனி
பக்குவத்துக்கு வந்து சாந்தம் கமழத் தெய்வீக நிலை பெற்றிருக்கும்
என்பது தெரிந்து ரங்கா பேசிய பேச்சு சிவப்பிரகாசத்தை என்னவோ
செய்தது.
'என்னைச் சங்கப்படுத்திவிடும் வரம் எதையும் கேட்டு விடாதே
அக்கா' என்று மனத்தில் அவர் பயந்து சிலிர்த்த நேரம்..
''சிவா, என்னைக் காசிக்குக் கூட்டிண்டு போயேன். எனக்கென்
னவோ இப்பவே அந்த விஸ்வநாதனையும், விசாலாட்சியையும் பார்க்
கணும்போல இருக்குடா.''
ஆச்சரியத்தோடு சுதாரிப்புக்கு வந்தார் சிவப்பிரகாசம். ரங்காவின்
ஆசை அவரைக் கொஞ்சம் அதைரியப்படவே செய்து பதில் வார்த்தை
பேச முடியாதபடி ஒரு மௌனம் அவரை இறுக்கியது.
''உன் கையில ஒத்தக்காசு இல்லேங்கறது எனக்குத் தெரியும் சிவா.
இருந்தும் கேக்கறேன்னா காரணமாத்தான்! வித்யாவுக்காகப் பிரார்த்

தனை பண்ணின்டு கங்கையில் மூழ்கி எழுந்தா, அந்தக் கங்காதேவி
அனுக்கிரகத்தால அவ இந்தக் கிழவிக்குச் சாவு ஒண்ணும் தூரம்
இல்லை. எந்த நாழியும் வரலாம். சாகறதுக்குள்ற அந்தக் கங்கையுல
மூழ்கிடலாம்னு பாக்கறேன். இது என் மன விருப்பம் இல்லை. ஆத்
மதாகம். என்னால இந்தத் தள்ளாடற உடம்போட தனியா போய் வர
முடியாததனால தான் உன்னைக் கேக்கறேன்.''

சிவப்பிரகாசம் ஆதூலத்தோடு தம் அன்புச் சகோதரியின் கைகளைப்
பற்றினார். ''பார்க்கலாம்கா'' என்றார்.

''பாக்கலாமா? என்னடா சந்தேகமா சொல்றே?''

''சரிக்கா.''

''சரின்னா, சத்யம் பண்ணு.''

''சத்யம் பண்ண இது என்னக்கா அவ்வளவு பெரிய விஷயம்?''

''ஆமாண்டா. இது பெரிய விஷயந்தான்! நான் காசியில நீராடறதை
விட நீ நீராடறது எனக்குப் பெரிசுடா. அதனால் தான் சொல்றேன்.

''சரிக்கா, அந்த ஈஸ்வர சத்யமா உன்னைச் காசிக்குக் கூட்டிண்டு
போறேன்.''

''எப்ப?''

''கூடிய சீக்கிரத்துல''

அதன் பின் அப்படியே அயர்ந்து உறங்கிவிட்டார். நாணா வந்து
வேகமாக உசுப்பும் போது தான் கண் மலர்ந்தது. உசுப்பிய நாணாவின்
முகத்தில் அநியாயப் பதற்றம்!

''என்ன நாணா, என்ன விஷயம்?''

அவன் வாசற்படியருகே நிற்கும் நபரை நோக்கிக் கையைக் காட்
டினான். சிவப்பிரகாசம் பார்க்கவும்,அவர் தயக்கத்தோடு உள்ளே வந்
தார்.

''யாரு நீங்க?'' சிவப்பிரகாசம் கேட்டார்.

''வணக்கம் சாமி, நான் டவுன்ல இருந்து வரேன். உங்க பொண்ணு
ஊட்டுக்குப் பால் ஊத்தற பால்காரனுங்க நான். காலம்பற பால் ஊத்
தப் போயிருந்தேன். ஊட்ல ரவுசு பெரிசா இருந்திச்சு. ஜன்னல் வழி
யாய் எட்டிப் பார்த்தேன். உங்க பொண்ணை அந்த ஆடிட்டர் அடிச்
சுக் கொடுமைப்படுத்திக்கிட்டு இருந்தாரு. என்னைய கண்டதும் அடிக்
கிறதை நிறுத்திக்கிட்டாரு. உங்க பொண்ணும் அங்கேயே 'பெரியசாமி,
சீக்கிரமா எங்க அப்பாவை வரச் சொல்லு. பக்கத்துச் சங்கராபுரம் ஊர்ல
சிவன் கோயில்ல குருக்களா இருக்காரு.. உன் கால்ல விழறேன். வரச்
சொல்லுன்னு' சொல்லிப் புலம்பிடிச்சு. உடனே அவர் அதும் வாய்
மேல அடிச்சாருங்க.

சாமி நீங்க இனியும் தாமதிச்சா உங்க பொண்ணைப் பொண்ணாப்
பாக்க முடியாது. உடனே கிளம்புங்க. இது தெரிஞ்சா என்கிட்ட அவுக
வியாபாரம் பண்ணமாட்டாங்க இனிமே. பரவால்ல. நீங்க கெளம்புங்க
சாமி..''

பெரியசாமி என்னும் அந்தப் பால்காரன் கொஞ்சம் நீளமாகப் பேசி
னாலும் மனிதாபிமான உந்துதலை, அதன் தைரிய வெளிப்பாட்டை



அதில் பார்க்க முடிந்தது.

வாரிச்சுருட்டிக் கொண்டு ஓடினார் சிவப்பிரகாசம்.

அங்கே...

''என்ன மாப்பிள்ளை இது? இப்படி அநியாயம் பண்றேளே? தாலி
கட்டின பொண்டாட்டிய விட காசும், நகையும் பெரிசாப் போயிட்
டதே உமக்கு? நான் என்ன வெச்சுண்டு இல்லேங்கறனோ? ''

'' அதப்பத்தி எனக்கு கவலையில்லை. இன்னிக்கும் இவளை நான்
ஒதிக்கிட்டா எனக்கு லட்ச ரூபா தந்து பொண்ணு தர தயாரா இருக்கா.''

'' நம்ப தர்மத்துல அதுக்கெல்லாம் இடமே கிடையாது. வேண்
டாம் பொல்லாத பேச்சு. சமாதானமா போங்கோ. கூடிய சீக்கிரம் வீட்டு
பிரச்சனை தீர்ந்துடும். வீட்டையே உங்க பேருக்கு எழுதி வெச்சிடு
றேன்.''

'' தர்ம நியாயத்தைப் பத்தி எனக்கு கவலையில்லை. சோறு போட
றது தர்ம நியாயம் இல்லை. காசும் பணமும் தான் ''

'' புரியாத வயசு தலைகீழாப் பேசறேள். ''

உள்ளே அவனது தாய் தந்தையர் வாய் மூடிக் கிடப்பதைக் கண்டு
அந்தப் பக்கம் ஓடினார் சிவப்பிரகாசம்.

'' என்ன சம்பந்தி வாய் மூடிண்டு இருக்கேளே? நீங்க பெரியவா
சொல்லப்படாதா? ''

அவர் பதில் சொன்னார்.

'' சுருக்கமா சொல்றேள் சம்பந்தி. இந்தக் குடும்பம் ஒரு ரோஜாத்
தோட்டம். அவன் ஒரு கள்ளிச் செடி! எங்களால வெட்டி எறிய முடி
யலே. பாசம் தடுக்கிறது. உங்களாலயும் முடியலைன்னா உங்க
பொண்ணை அழைச்சிண்டு போயிடுங்கோ ''

'' இது கையாலாகாத பேச்சு, பெத்தவளால முடியாதது மத்தவளால
எப்படி முடியும்? '' சிவப்பிரகாசம்.

'' வாஸ்தவம் தான். முடியாதது தான். என்ன பண்ணச் சொல்றேள்?
நாங்க எதிர்த்தா, சட்ட நியாயம் பேசறான். எத்தனை நாளைக்கு ரசா
பாசமாவே போயிண்டிருக்க முடியும். அவன் இப்படி ஆயிட்டான்னா
நாங்க காரணமில்லை... எல்லாம் சமுதாயப் பாதிப்பு ''

'' புரியலையே எனக்கு. இப்ப யாரு காரணங்கிறதா முக்கியம்? ''

'' நிச்சயம் ஒரு பக்கம் வரதட்சணைக்கு எதிர்ப்பா இயக்கங்களே
வளர்ந்துண்டு இருக்கு. ஆனாலும் என்ன பிரயோசனம்? '' தொடர்ந்
தார் சம்பந்தி.

'' அன்னிக்கு நாதான் நிச்சயதார்த்தத்துல அவன் சார்புல கேட்டேன்.
கேட்டது அவனுக்கு அல்ல. உம் பொண்ணுக்காகத் தான். பொதுவுல
வரதட்சணைங்கிறது ஒரு பொண்ணு தன் பாதுகாப்புக்கு எடுத்துண்டு
வர்ற விஷயங்கிறது மாறி இன்னிக்கு அது மாப்பிள்ளைக்கு தர்ற லஞ்
சம்னு உருமாறிடுத்து.''

'' உங்களால முடியாதுன்னு தெரிஞ்சா பிறகு நான் அத பெரிசா
எடுத்துக்கல. அவன் எடுத்துக்கிறான்னா அதுக்கு அவன் ஊதாரித்தனந்
தான் காரணம். அதுக்கு தீனி போடற சினிமா, டிராமாக்கள் காரணம்.

பழகுற செநேகிதர்கள் தான் காரணம். அல்ப சந்தோஷத்தைப் பெரியதா நினைக்கிற சுயபுத்தி இல்லாமை ''

சிவப்பிரகாசம் அந்த நீண்ட பிரசங்கத்தைக் கேட்டு அப்படியே அயர்ந்து சாய்ந்து விட்டார். விடிவைத் தேடி வந்தவரா? இல்லை, விளக்கம் தேடி வந்தவரா?

'' வாம்மா வித்யா போவோம் ''

தற்காலிகமாக வித்யாவை அங்கிருந்து அழைத்து வரத்தான் முடிந் தது. விவாகரத்து என்கிற கோணத்துக்கே இவர் போகவில்லை.

'' அந்தக் கன்றாவியெல்லாம் நமக்கெதுக்கும்மா. நம்ம பாவம் ஆயிடுத்துன்னு நெனைச்சுண்டு இருந்துடுவோம்.

காலம் இப்படியேவா போயிடும்?'' என்று சமாதானித்து, எரிமலை மனத்தைத் தற்காலிகமாக அமைதிப்படுத்திக் கொண்டார்.

கூடவே எச்சரிக்கையாக இருக்கவும் செய்தார்.

''அக்கா, அவளை ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கோ, வேதனையில் காவேரிப்பக்கம் பாஞ்சுடப்போறா. வெளியில கொஞ்ச நாளைக்கு விடாதே.''

இருந்தும்,

வித்யா என்னும் அந்த மெழுகுவர்த்தி ஒரு நாள் தனக்கு வாழ்க்கை அறவே இல்லாது போய்விட்ட அவலத்தில் மனது உடைந்து மண் ணெண்ணெயில் நனைந்து தீக்குள் புகுந்து விட்டது.

கோயிலில் தீபாராதனை காட்டும் சமயம் ஒரு கூட்டமே ஓடி வந் தது.

''சாமீ, உம் பொண்ணு தீக்குளிச்சுட்டா சாமீ!'' ஒருத்தர் கதற, அப் படியே ஓடி வீட்டுக்கு வந்தார் சிவப்பிரகாசம்.

''நாலைந்து இதயம் மார்புக்குள் இயங்குவது போன்ற பிரமை. வழி கொப்புளித்து உடம்பு வியர்த்துவிட்டிருந்தது!

பச்சை வாழை இலைமீது கரிக்கட்டையாப் படுத்திருந்தாள் வித்யா! ஜீவன் இன்னும் போகவில்லை.

பக்கமாக வாரி அணைக்கப் பரபரத்தது சிவப்பிரகாசத்தின் கைகள் அப்பா என அழைத்தது.' அந்த அபலைப் பெண் தான்!

''அப்பா என்னை மன்னிச்சுடுப்பா, எனக்கு வேற வழி தெரியலை. என்னால நீ படற கஷ்டத்தைப் பார்க்க முடியாமத்தான்.''

அதற்குமேல் பேசமுடியாதபடி தொண்டையை வலிகட்டியது. அதேசமயம் ஒரு மெடிகல் வேனும், போலீஸ் ஜீப்பும் கூட வாசல்பு றம் வந்துவிட்டிருந்தது.

''அத்தை'' குரல் கேட்டு ரங்கா திரும்பினாள்.

சோக ஸ்தம்பிப்பில் இறுகிப்போய் விட்டிருந்தான்.

''எனக்கு அம்மா மாதிரி அத்தை நீ எப்பவும் நீயே எனக்கு அத் தையா வரணும். அத்தை சஷ்டி கவசம் சொல்லு அத்தை சொல்லு அத்தை'' குரல் தேய்ந்தது.

ரங்கா சொல்ல ஆரம்பித்தாள் ''வல்வினை போம் துன்பம்போம், நெஞ்சில் பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் கதித்தோங்கும்''



வித்யாவின் ஆன்மா கூட அதைக்கேட்டு விட்டு மகிழ்வோடு கூட் டைவிட்டுச் செல்லத் தொடங்கி விட்டது.

சிவப்பிரகாசம் கதறிய கதறலில் வீட்டு உத்தரமே நடுங்கியது. உடம்பை அள்ளிப் போட்டுக்கொண்டு 'வேன்' செல்லக் கூடவே ஜீப் பில் அவரை நாலு பேர் அமுக்கிப் பிடித்துக் கொள்ள ஜீப்பும் அந்த வேனைத் தொடர்ந்தது.

இருட்டி விட்டது.

''பாடி நாளைக்குத்தான் தர முடியும். போஸ்ட் மார்ட்டம் செய்ய ணும்'' மருத்துவமனையின் நடைமுறை விதியைச் சொன்னார்கள். போஸ்ட்மார்ட்டம் பிரிவில் ஒரு வெள்ளை மூட்டையாய் வித்யாவைச் சரித்துக் கிடத்திவிட்டு இரண்டு பேர் திரும்பி விட்டார்கள்.

அந்தப் பெரிய பிண அறையின் பல வெள்ளைப் பிண மூட்டைக ளுக்கு மத்தியில் வித்யாவைச் சரிப்பதை தொலைவிலிருந்து ரங்கா பார்த்து விட்டுப் புலம்பின புலம்பலில் இந்தியப் பெண் சமூகமே தெரிந்தது!

திடீரென அங்கே அசாத்திய பரபரப்பு!

அதற்குக் காரணமாக ''சிவப்பிரகாசத்தைக் காணோம்!'' எனும் பேச்சு ஒரு குறுந்தீயாய் பரவ, சிவப்பிரகாசம், வித்யாவுக்கு வாழ்க் கைப்பட்டவன் எதிரே இருந்தார்!

மாடியில் ஒரு தனி அறையில் ஏதோ காரியமாக இருந்த மூர்த்தி, ஒரு புலி போல வந்து எதிரே நிற்கும் சிவப்பிரகாசத்தைக் கண்டு கொஞ் சம் பயந்தான்.

''எங்கே வந்தேள்?... என்ன விஷயம்?'' அவன் அலட்சியமாகக் கேட்டான்.

''எரியற வயித்தெரிச்சலோட சாபம் கொடுத்துட்டுப் போகவந் தேன். ஏழு தலைமுறைக்கு நீ நன்னா இருக்க மாட்டே. இது அத்த ஈஸ்வர சத்தியம். என் பொண்ணு இன்னிக்குத் தீயிலக் குளிச்சுக் கரு கிப்போய் சவமா கிடக்குறான்னா அதுக்குக் காரணம் நீ! உன் காசு ஆசை! எந்தக் காசு பணம் காரணமா அவளுக்கு இந்தக்கதி வந்ததோ. அந்தக் காசு பணம் இனி உன்கிட்ட தங்கவே தங்காது. உன்கிட்ட மட் டுமில்ல உன்மாதிரி புத்திகொண்ட எந்த ஆண்மகன் கிட்டேயும் அது தங்காது. தங்கக்கூடாது!''

அவர் கதறிய கறதல் கீழே இருந்த சம்பந்தியைக் கூட மாடிப்புறம் இழுத்து வந்தது.

''சம்பத்தி என்னா இதெல்லாம், ஏன் இப்படிக் கத்தறேள்.'' கோ தண்டராமன் எனும் அவர் அசட்டையாகவும், அலுப்பாகவும் கேட்க ஆத்திரம் தாளாது திரும்பினார் சிவப்பிரகாசம்,

''ஏன் அப்படிக் கத்தறேனா? மருத்துவ மனைக்கு வந்து என் பொண்ணு உடம்பை பாருங்கோ; அப்புறமாகக் கேளுங்கோ. விடிஞ்சா போஸ்ட்மாட்டம்கற பேர்ல அவளைக் கூறு போடப்போறா சுவாமி கூறு போடப் போறா... எல்லாம் யாரால?இதோ நிற்கறாரே ஸ்ரீமான் மூர்த்தி! இவரால தானே?''

கேட்டதும் கோதண்டராமன் அப்படியே ஒடிந்து விழுந்து விட்டார்.

''ஆடத் தெரியாத தேவதாசி, வீதி கோணல்னு சொன்னாளாம். அந்த மாதிரி இருக்கு உங்க பேச்சு'' மூர்த்தி அத்தனைக்குப் பிறகும் வாதிக்க ஆரம்பித்தான். யாரும் எதிர்பாராத விதத்தில் அவனது கன்னத்தின்மேல் கோதண்டராமனின் கரங்கள் அலைந்து ஓய்ந்தன.

செக்கச் சிவந்த முகத்தோடு இளமைத் துடுக்குடன், மூர்த்தியும் தகப்பன் என்று பாராமல் பதிலுக்கு கையை ஓங்கினான். பாய்ந்து தடுக்கப் பார்த்தார் சிவப்பிரகாசம்.

முறித்துக்கொண்டு மீறப்பார்த்தான். பக்கத்து மேஜை மேல் இருவருமாய் விழ, கோதண்டராமன், சுவரில் ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த ஹாக்கி மட்டையைக் கைகளில் எடுத்துக் கொண்டு வேகமாக ஊடே புகுந்தார். வெறியில் என்ன செய்கிறோம் என்பது கூட தப்பிப் போயிருந்தது அவருக்கு!

மட்டையின் பருந்த பரப்புகள் மூர்த்தியின் எலும்பு களையும் சதை களையும் அதிர்வோடு சந்தித்து அலுத்தது!

வலியோடு மேஜைமேல் விழுந்தது தரையில் சரிந்தான். எதிர்பாராத விதமாக மேஜை விளிம்பு அவனது உயிர்நிலை மீது குத்தலாக மோதியது.

அறைக்கு வெளியே அவனைப் பெற்றவள் தர்ம சங்கடத்துடன் நிற்க, சிவப்பிரகாசம் தன் பங்கிற்கு அவனது உயிர் வேதனை தெரியாமல் அவன் மேல் விழுந்தார்.

கட்டின மனைவியைத் தாண்டி பெற்ற தகப்பனையே துவம்சம் செய்ய நினைத்த அவனது கடூரத்தை அடக்கும் வெறிதான் அவரிடம் அப்பொழுது பிரதானமாக இருந்ததே அன்றி, வேறு உணர்வுகள் மங்கிவிட்டிருந்தன.

அவன் மயங்கி விட்டதுபோல் தோன்றியது. அவர் களைப்போடு எழுந்திருந்தார். அழுது கொண்டும் பதறிக்கொண்டும் நிற்கும் கோதண்டராமனை ஒருபார்வை பார்த்தார். மறுபார்வை அவரது மனைவி மேல், அதற்குப் பிறகு அவர் அங்கே நிற்கவில்லை.

வாசற்படியை அவரது தேகம் கடந்து வீதிக்கு வந்த பொழுது, மூர்த்தியின் தாய்க்காரி அவலத்தோட புலம்பினாள்.

''அய்யய்யோ மூர்த்தியிண்ட மூச்சையே காணோம்னா. உடம்பு ஜில்லிட்டுண்டு வர்றது... நம்மளை விட்டுட்டுப் போயிட்டான்போலிருக்கே?'' குரலில் வெடித்தாள்.

கறுத்த ராத்திரி!

நள்ளிரவைத் தாண்டிவிட்ட அரை நிலா வானத்தில் ஓர் ஓரமாக இருந்தது.

மருத்துவமனையின் அத்தனை வார்டினும் எரியும் வெளிச்சத்தினூடே ஓர் அமைதி. போஸ்ட் மார்ட்டம் கட்டடத்துக்கு வெளியில் வாதநாராயண மரங்களுக்குக் கீழ் பலர் தீவு தீவுகளாய்ச் சேர்ந்து உட்கார்ந்திருந்தார்கள். ஒரு வார்டின் வராந்தாவில் ரங்காவும், சுற்றமும் அயர்ந்து உட்கார்ந்திருக்க, சிவப்பிரகாசம் அங்கே அமைதியாய் நுழைந்



தபோது, களைப்பிலும் அலுப்பிலும் அந்த இருட்டில் யாரும் அவரைக் கண்டுகொள்ளவில்லை. 'நாணா' மாத்திரம் எழுந்திருந்து அவர் பக்கம் போய் உட்கார்ந்தான். அவரையே பார்த்தான்.

பிறகு சைகை மூலமாகவே பேச ஆரம்பித்தான். தன் வசம் இல்லாத மீசையை முறுக்கி முண்டா தட்டி ஒரு கம்பீர உருவைக் காட்டி அந்த உருவம் சற்றுமுன் கோவிலுக்கு வந்ததாகச் சொன்னான்.

கோவில் என்ற உடனே அவருக்குத் துக்கம் கூடக்கொஞ்சம் பின்னால் போய்விட்டது.

''என்னடா சொல்றே?'' அவர் கேட்க ஒரு சைகை வாதம் தொடங்கியது.

''அன்னிக்கு வரலே நாலு பேர்''

''ஆமா..''

''இன்னிக்கு வந்தா''

''வந்து..''

''உன்னைப் பார்க்கணும்னா....''

''எதுக்கு...?''

''தெரியலே. ஆனா நல்ல நோக்கமா எனக்குப்படலே...எனக்குக் கூட நிறையப்பணம் தரப்பார்த்தா...''

''நீ என்ன பண்ணே...''

''பணத்தை வாங்கல.. உன் நிலையை ராஜகோபாலனைக் கொண்டு சொல்லச்சொன்னேன்...''

''ராஜகோபாலன் எதுக்குக் கோவிலுக்கு வந்தான்?''

''ஏதோ மருந்துக்கு வில்வ இலை வேணும்னா வந்தார்?''

''இப்ப அவா போயிட்டாங்களா?''

''அப்பவே போயிட்டா...''

'' இவர் யார்? எதுக்கா தொடர்ந்து வரா... புரியலைடா நாணா. எனக்கு என்னவோ பயமா இருக்கு.. தர்மகர்த்தாவைப் பார்த்து விபரம் சொல்லணும். கோவில் சாவி என்கிட்டன்னா இருக்கு! என்னால் இன்னும் ஒரு மாசத்துக்குக் கோவில் பக்கம் வரமுடியாது. பிள்ளையார் கோவில் சாம்பு சாஸ்திரிகளைப் பார்த்துச் சொல்லணும், வா. தர்மகர்த்தாவைப் போய்ப்பார்ப்போம்..''

நாணா தயக்கத்தோடு நடந்தான். கோவிலைத் தாண்டித்தான் தர்மகர்த்தா வீட்டுக்குச் சென்றாக வேண்டும்.

அந்த அர்த்த ராவில் ஊரே அயர்ந்து உறங்கிவிட்டிருந்தது. ஒழுங்காக எரியாத தெரு விளக்குகளின் துணையால் இருள் ராஜ்யத்தில் சில வண்டுகள் கம்பீரமாக உலாத்திக் கொண்டிருந்தன.

''நாணா.. நீ வழக்கம் போலக்கோயில்ல போய்ப்படுத்துக்கோ. ராத்திரி காவலுக்கு வர்ற முனியனைச் சூதாரிப்பா இருக்கச்சொல்லு. எனக்கென்னவோ பயமா இருக்கு. நீ இப்ப இப்படியே கோயிலுக்குப் போகாதே! இழவுத்தீட்டைக் காவிரியில் மூழ்கிக் கழிச்சிட்டுப்போ...''

நாணா காவேரிப் பாதையில் திரும்ப, சிவப்பிரகாசம் கோயிலை நெருங்கிக் கொண்டிருந்தார். ஒரு மரத்த நிலை. எண்ணங்களோ குதி

தாளமிட்டன.
'என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிட்டியே? தொடர்ந்து உற்சாகத்
தோட கைங்கர்யம் பண்ண எனக்கு எப்படி மனசு வரும்? நான் என்ன
கோடி கொடுன்னா கேட்டேன். இருக்கறதை ஒழுங்கா வைன்னுதானே
சொன்னேன், அதுக்குக் கூட வழி இல்லாமப் பண்ணிட்டியே. அத்த
னைப் பெரிய பாவியா நான்..' நடந்து கொண்டிருக்கும் போதே அழுது
தம்மை மறந்து நெஞ்சில் அறைந்து கொண்டார் சிவப்பிரகாசம்.
கோயிலைத்தாண்டும் பொழுது வழக்கம்போல் கோபுரக் கதவு
மூடியே கிடந்தது. கோவில் வாசலைப் பார்த்த வீதியில் அநியாய
அமைதி.
தர்மகர்த்தா இன்னமும் உறங்கவில்லை. வெளியே கட்டிலில் மல்
லாந்திருந்தார். பக்கமாய் இரண்டு பேர் வித்யாவின் மரணம் தொடர்
பாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். எதிர்பாராது வந்துநிற்கும்
சிவப்பிரகாச குருக்களைப் பார்த்துத் திகைத்துப்போயினர்.
''என்ன சுவாமி.. இந்த ராத்திரியில? ஏதும் பண உதவி
வேணுமா...?''- தர்மகர்த்தா அபிமானக் கொப்பளிப்போடும், வாஞ்
சையோடும் கேட்டார்.
''அதெல்லாம் ஒண்ணுமில்லை. கோவில் சாவியைக் கொடுக்க வந்
தேன். எந்தக்காரணத்தைக் கொண்டும் கோவிலைப்பூட்டி வைக்க
வேண்டாம். சாஸ்திரிகளைக் கொண்டு பூஜைகளைக் கிரமப்படி முடிச்
சுடுங்க...''
தர்மகத்தாவுக்குள் நெகிழ்ச்சி கரை மீறியது. இந்த நிலையிலும்
ஆலய சம்பந்தமான அந்தத் தாத்பர்ய உணர்வுகளை அவர் காட்டிய
தில் மனசு இலேசாகிப்போனது.
''இந்த நிலையில் நீங்க வரணுமா? நானும் ஆசுபத்திரிக்கு வந்தி
ருந்தேன். உங்களைத்தான் அங்க பார்க்க முடியல, எங்க போயிட்
டீங்க?''
''..... .....'' கனத்த மௌன நீச்சலிட்டார் சிவப்பிரகாசம்.
''கவலைப்படாதீங்க.. நடந்தது நடந்து போச்சு! உமக்கு ஆறுதல்
சொல்ல முடியாதுதான். இருந்தாலும் சொல்றோம். காலம் எவ்வளவோ
வளர்ச்சிகளைக் கண்டாலும் இதுமாதிரி தேயுமானங்களும் இல்லாம
இல்லை. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு என்னை ஆம்பிளைன்னு
சொல்லிக்கக்கொஞ்சம் யோசிக்க வேண்டியிருக்கு...''
பேசிக்கொண்டே எழுந்து உள்ளே சென்ற தர்மகர்த்தா ஆயிரம்
ரூபாய் பணத்தோடு வெளியே வந்தார்.
''இது என் சொந்தப்பணம். மறுக்காம வாங்கிக்குங்க. காரியத்தை
ஒரு குறையுமில்லாம முடியுங்க..'' என்றார்.
சிவப்பிரகாசம் தயக்கத்தோடு பணத்தை வாங்கிக் கொண்டார். துண்
டால் முகத்தைத் துடைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்.
''டேய், சாமிகூடத் துணையாப் போய் வாங்கடா'' பக்கத்திலிருந்த
நபர்களைத் தர்மகர்த்தா முடுக்கிவிட்டார்.
''வேண்டாம்... நான் போய்க்கறேன்.. எதுக்கு உமக்குச் சிரமம்?''



''இருக்கட்டும் சாமி...''
''வேண்டாம்.. சொன்னா கேளுங்கோ.. எனக்குத் தனிமை
வேணும்.''- அவரின் அந்தப் பதிலே, அவரை ஒரு புதிய பிரச்சனை
யின் முடிச்சுக்குள் சிக்க வைக்கப்போகிறது என்பது அவருக்குத் தெரி
யவில்லை.,
அந்தப் புதிய சிக்கல் சிவன் கோவிலில் அரங்கேற்றமாகிக் கொண்
டிருந்தது. கோவிலுக்கு வெளியே கொஞ்ச தொலைவில் ஒரு மெடிக்
கல் வேன்,
அதனுள் சந்திரன், முத்து, காளி, ஜோசப்
சிவப்பிரகாசத்தை ஹிப்னடைஸ் (மனோவசியம்) செய்து அவரைக்
கொண்டே கடத்தலாம் என்ற தனது கருத்து செத்துப்போயிருந்த வருத்
தம் காளி முகத்தில் தெரிந்தது.
எதிர்பாராத திருப்பங்கள் சிவப்பிரகாசத்தைப் பல நாட்கள் கோவில்
பக்கம் வரவிடாது செய்து விட்டதை அசை போட்டு அலுத்துவிட்டு,
இறுதியில் தங்கள் பழைய பாணிக்கே முயலுவது என்ற முடிவுக்கு வந்
தனர்.
சிவப்பிரகாசம் மகள் சாவால் மருகி உருகிக் கிடக்கும் இந்த வேளை
யில் ஊரும் கூட அந்தப்பிரச்சனையில் திசை திரும்பத் தன்னை மறந்
திருக்கும் இந்த ஏற்ற தருணத்தில், நடராஜரை இடம் மாற்றினால் தான்
ஆயிற்று.
அதோடன்றித் தங்களின் வேறு பல முக்கிய வேலைகளின்
பொருட்டு மறுநாளே சிங்கப்பூருக்குச் சென்றாக வேண்டிய கட்டா
யம் அவர்களை அழுத்திக் கொண்டிருந்தது.
ஆலயத்தின் உள்ளே இடப்பாதம் தூக்கி ஒய்யார நடனமிடும் அந்த
நடராஜமூர்த்திக்கு நான்கு லட்ச ரூபாய் மதிப்பை உண்டாக்கியிருந்
தார்கள் அவர்கள்.
முன் பணமாகப் பெற்று வந்திருக்கும் ஒற்றை லட்சம் அவர்களைப்
பிழிந்து கொண்டிருந்தது. இதுபோன்ற வியாபார முயற்சிகள் எல்
லாமே 'கர்ணம் தப்பினால் மரணம்' போன்ற கதைதான். எப்படியும்
மரணத்தைத் தவிர்த்துவிடும் வேகம், அறிவு, வெறி அனைத்தும் அந்த
நால்வரிடமும் தளும்பி வழிந்தன.
அதன் முதல் செயல்பாடாக வேன் கோவிலுக்கு வெளியே தொலை
விலேயே நின்றுகொள்ள, வேனின் பானட்டைத் திறந்து வைத்துக்
கொண்டு காளி அதில் கோளாறு இருப்பது போன்ற பாவனையைக்
காட்ட ஆரம்பித்தான்.
ஆனாலும் எச்சரிக்கைப் புத்தி அணுசுத்தமாக வேலை செய்ய ஆரம்
பித்தது. மற்ற மூவரும் கோவிலை நோக்கி நடந்தனர். கோபுரக் கதவு
உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது. சுற்றுமதில் சுவர் அத்தனை உயர
மில்லை. ஒரே தாவில் அதைத்தாண்டினான் முத்து.
கைவசம் வீரியமான மயக்க மருந்து பரவிய கர்ச்சிப். அதை உறக்
கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருக்கும் நாணாவின் நாசிப்புறம்
போட்டு அழுத்த மேலோட்டமான நாணாவின் உறக்க முனைப்பு ஆழ

மானது.
அடுத்து முனியன், அவனையும் மயக்க உற்சாகத்தில் அழுத்திவிட்டு
நிமிர்ந்தபோது மற்ற இருவரும் வந்து விட்டிருந்தனர். உறைகளை எடுத்
துக்கைகளில் மாட்டிக் கொண்டனர்.
சந்நிதி நடைக்கதவு ஆள் உயரத்தை மீறி நின்றுகொண்டிருக்க
பூட்டை உடைக்காமல் திறக்கும் யத்தனத்தில் சரியாகப் பத்து நிமிடப்
போராட்டத்தில் வெற்றி கண்டான் ஜோசப்.
மங்கிய குத்துவிளக்கின் வெளிச்சத்தில் இரும்புக்கதவுகளுக்கு அப்
பால்தெரிந்தார் நடராஜர்.
ஆயிரக்கணக்கான விதவிதமான பூட்டுகளைத் திறந்து திறந்து அனு
பவப்பட்ட ஜோசப்பின் கரங்கள் இங்கும் வேகம் காட்டின.
சந்திரன் பரபரப்போடு ரேடியம் கடிகாரத்தைப் பார்த்தான்.
''முடியலேன்னா நெம்பி உடைச்சுடு...''- கசகசப்பாகக் கத்தினான்.
''அவசியமில்லை. கைவசம் நூறு சாவிக்கு மேலே இருக்கு. ஏற்க
னவே பார்த்துட்டுப் போன பூட்டுத்தானே! இந்தப் பத்துச்சாவியில
ஒண்ணு தேறிடும்...''
அதுபோல தேறிவிட்டது!
அகிலத்தையே ஆடவைக்கும் நடராஜமூர்த்தியின் மேல் வலப்பு
றம் கைவைத்தான் சந்திரன். இடப்புறம் முத்து.
பீடத்தைவிட்டு வெளிக் கிளம்பியது நடராஜமூர்த்தியின் அந்த
அபூர்வ விக்கிரகம், ஜோசப் வேகமாக ஓடிவந்து கோபுரக்கதவைத்
திறந்த போது முதல் சோதனை ஆரம்பமானது.
சப்தம் போட்டுக் கிறீச்சிட்டது அதன் கதவு!
அப்பொழுதுதான் கோவிலின் கோபுரவாசலைக் கடந்து அப்பால்
சென்றிருந்தார் சிவப்பிரகாசம். சப்தம் அவரை அழைத்தது. எதேச்
சையாகத் திரும்பினவருக்குத் தூக்கி வாரிப்போட்டது.
கறுத்த இருட்டில் அதைவிடக் கறுத்த இருட்டாக மூன்றுபேர் தெரி
யும் விதம். திடும்மென்று ஒரு குயில் கூவுவது போன்ற சப்தம். அதைத்
தொடர்ந்து மெடிக்கல் வேன் வாசலை நெருங்கும் திட்டம்.
ஒன்றும் புரியாமல் நடையை ஓட்டமாக்கிக் கொண்டு கோபுர வாச
லுக்கு வந்தவரைச் சந்திரன் பார்த்துவிட்டு பதறிப்போனான். விநாடி
யும் தாமதிக்காமல் முத்து வாயைப் பொத்தி வேனுக்குள் அவரைத்தள்
ளினான்.
ஜோசப் வேனுக்குள் இருக்கும் போலி விக்கிரகத்தை மறந்தவனாக
உள்ளோடி கோவில் கதவுகளைப் பழையபடி சாத்தி மூடினான்.
அனைத்தும் இரண்டு நிமிடத்தில் முடிந்துவிட்டது.
வேன் சீறிக்கொண்டு கிளம்பவும் எதிரே தொலைவில் ஒரு காரோ,
ஜீப்போ வரும் வெளிச்சம் தெரிய, பக்கத்துக் காவேரிப்பாதையில்
வேனைத் திருப்பினான் காளி.
''ஏண்டா இந்தப்பக்கம் திருப்பினே?... பாதையிலே போறதுக்
கென்ன? இந்தப்பக்கமா போனா ஆத்துக்குள்ளதான் விழுந்து சாக
ணும்...''



-வியர்க்க விறுவிறுக்க முத்துகேட்ட கேள்விக்கு,
''எதிரே வர்றது போலீஸ் ஜீப்புடா முண்டம்...''எனும் காளியின்
பதில் அனைவரையுமே உறைய வைத்து விட்டது.
''போலீஸுக்குத் தெரிஞ்சு போச்சா?''
''நிச்சயமா இல்லை, வேற எதுக்கோ வந்திருக்காங்க...''
'' எதுக்கு?''
-விடையாக ஜீப் கோவில் வாசலில் நின்றது,
இரண்டு போலீஸ்காரர்கள் இறங்கி, மூடிய நிலையில் உள்புறம்
தாழிடாத கிடக்கும் கோபுரக் கதவைத்திறந்து கொண்டு உள்ளே
நுழைந்தனர்.
பிரகார வெளியின் அமைதியில் டார்ச் விளக்கின் வெளிச்சத்தில்
நாணாவும், முனியனும் உறங்குவது தெரிந்தது. வேறு யாரையும்
காணோம்.
''குருக்கள் இங்கேயும் இல்லை...''
''சரி, பழையபடி ஆசுபத்திரிக்கே போவோம். இம்மீடியட்டா
மேட்டரை மற்ற எல்லா ஸ்டேஷனுக்கும் பார்வர்ட் பண்ணனும்...''
-இன்ஸ்பெக்டர் பதறினார்.
திரும்பவும் ஜீப் புறப்பட்டது.
ஆனால், மெடிக்கல் வேன் காவேரிக்குச் செல்லும் பாதையில்
காவேரிக்கு மிகச்சமீபத்தில் ஒரு பெரிய பள்ளத்தில் இறங்கிச் சண்டித்
தனம் பண்ண ஆரம்பித்தது.
சிவப்பிரகாசம் வாயில் அடைக்கப்பட்ட துணியால் பேச வழியற்று
மிரண்டு போய் வேனுக்குள் அமர்ந்திருந்தார். நடராஜ விக்கிரகம் கால்
மாட்டில் காலின் விரல் நுனிகள் வேன் குலுங்கும்போதெல்லாம் விக்
கிரகம் மேல்பட சிவப்பிரகாசம் தமக்குள்ளே அனற்புழுவானார்.
''என்னடா இது? எக்கச்சக்கமா மாட்டிக்கிட்டோம். சந்திரன் இறங்
கித்தள்ளுங்க, பள்ளம் பெரிசா இருக்கு..'' - ஆக்சிலேட்டரை ஆத்தி
ரத்தோடு மிதித்தபடி கத்தினான் காளி.
மூவரின் பலத்தின் முன் சக்கரம் பள்ளத்தின் முக்கால் பரப்பைத்
தான் கடந்தது. திரும்பத்திருப்பி உள்ளிறங்கியது.
''டேய்.. சாமியை ஒரு கைபிடிக்கச் சொல்லுடா...
வாயின் துணியை எடுக்காமல் அவரை வேனை விட்டுக் கீழே இறக்
கினார்கள். வேறு வழியற்ற கதியற்ற பதற்றத்தில் அவர்கள் உடம்பெல்
லாம் தந்தியடித்தது.
சிவப்பிரகாசம் இதுதான் சமயம் என அடம்பிடித்தார். சந்திரனின்
பருத்த முஷ்டி,, அவர் மேவாயைப் பதம் பார்த்தது.
''சாமி, சண்டித்தனம் பண்ணாதே! முக்கா கிணறு தாண்டிட்டோம்.
எங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னா உன் குடும்பத்தையே நாசமாக்கிடு
வோம். போலீசுக்கும் ஜெயிலுக்கும் பயந்தவங்க இல்ல நாங்க. விவ
காரம் பண்ணாம ஒரு கைப்பிடி...''
ரத்தம் ஒழுகும் வாயிலிருந்து வெளியே விழுந்த அடைபட்ட துணி.
''முடியாது. முடியாது.. இது பாவமான செயல். நீங்க நாசமாத்தான்

போவேள்!''

''உஸ் கத்தாம கைய பிடி...''

தொலைவில் காவேரியின் அமைதியான ஓட்டத்தில் கலந்து பரவும் காற்றில், இருவரின் சம்பாஷனைகளும் நடுவே மிரண்டு கதறும் வேனின் என்ஜின் சப்தமும் தெளிவாகவே கலந்து, கலந்துக் கரைந்து கொண்டிருந்தது.

''இப்பக்கூட எங்களுக்குப் பிரச்சனை இல்லை. நீதான் சிலையக் கடத்தினே... நாங்க ஒத்துழைச்சோம்னு கதையைத் திருப்பிடுவோம். ஜாக்கிரதை! ஒழுங்கா ஒரு கைபிடி. உன் மகள் ஆஸ்பத்திரியில கெடக்கிறா. அவ நல்லவிதமா வாழ்ந்துதான் சாகலே.. அவளுக்கான சாவுக் காரியத்தையாவது நீ ஒழுங்கா செய்தாகணும். அதுக்கு வழி இல்லாத படி எங்ககிட்ட அடிபட்டுச் சாகாதே!'' - சந்திரன் வெறியின் உச்சிக்கே போனான்.

''அவன் கிட்டப்பேசற நேரத்துக்கு நீங்களே முட்டிப்பாருங்க,,,'' காளி வேனுக்குள்ளிருந்து கத்தினான்.

''யோவ் இப்ப நாங்க விக்ரகத்தோடு போயாகணும், இதுக்குமாறா எது நடந்தாலும் உன் குடும்பத்தை என் ஆளுங்க தேடிப்பிடிச்சு கொளுத்திடுவாங்க! முரண்டு பிடிக்காதே... இதுவரைக்கும் நாங்க கொலை செஞ்சதில்ல... உன் மூலமா அதையும் செய்யவா?''

ஆத்திரத்தில் கத்தியோடு பாய்ந்தான் ஜோசப்.

சட்டென்று சிவப்பிரகாசம் வேனைத் தள்ள ஆரம்பித்தார்.

நால்வருக்கும் நிம்மதி.

சிவப்பிரகாசத்தின் உதிர ஓட்டத்தில் ஓர் அசாத்திய வெறி! தமக்குள் தோன்றிய திட்டப்படி வண்டியைத் தள்ளும் சாக்கில் வேனின் பின்புறக் கதவைப் பட்டென்று திறந்து விக்கிரகத்தைத் தூக்கினார் வெறித்தனமாக!

பள்ளத்தின் உச்சிக்கு வந்துவிட்ட சக்கரம் திரும்பவும் பள்ளத்தினுள் படுவேகமாக இறங்கியது.

சுமக்கமாட்டாது விக்கிரகத்துடன் எங்கே போகிறோம் என்பதே தெரியாது சிவப்பிராகசத்தின் கால்கள் ஓடலாயின. எப்படியும் விக்கிரகத்தைக் காப்பாற்றும் வெறியில் அந்தஇரவில் அவருக்கு அடைக்கலம் தந்தது காவேரியின் யானைமேடு.

அரைநிலா வெளிச்சத்தில் ''பொதேர்' என்று அதனுள் பாய்ந்தார் நடராஜமூர்த்தி.

''டேய்.. எங்கடா போயிட்டே? உன்னை விடமாட்டோம்டா.. உன் குடும்பத்தையே கூண்டறுப்போம்டா..''

கத்திக் களைத்துப் போனான் சந்திரன். வேனை அமைதிப்படுத்து விட்டு அப்படியே ஸ்டியரிங் மேல் விழுந்தான் காளி.

சிவப்பிரகாசம் கூடக்காவேரிக் கரையோரமாக ஒரு நாணற்புதரில் ஆசுவாசத்தோடு விழுந்து கிடந்தார்.

சுள்ளென்று ஒளிர்ந்த சூரியக்கதிர் சிவப்பிரகாசத்தைத் தொட்டு உசுப்பியது. அப்போது மணி ஆறரையிருக்கும். களைப்பு நீங்க கண்





மலர்த்தியவருக்கு 'நனவா! கனவா? ' பிரமை நீங்கச் சிலநிமிடம்
தேவைப்பட்டது.
எண்ணி இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் தமது வாழ்க்கையில்
தான் எத்தனை விதமான புயல்கள்! ஒவ்வொன்றும் ஒவ்வொரு
கோணத்தில் வந்து தாக்கி...
நிமிர்ந்தவரைச் சுற்றித் தெரிந்த முகங்கள்.
''மாமா, நீங்க இங்கேயா இருக்கேள்? உங்களைப் போலீஸ்
தேடிண்டிருக்கு!''
'' எதுக்கு?''
''உங்க மாப்ளே மூர்த்தியை நீங்க நேத்துக்கொன்னுட்டேளாமே?''
''ஈஸ்வரா, என்ன இது புதுச்சிக்கல்?'' மயக்கம் அவர் சிரத்தைப்
பிடித்துச்சுழற்றியது.
''மாமா முதல்ல யார் கண்ணுலேயும் படாம தப்பிச் சுடுங்கோ,
கேட்டா நாங்க சொல்லலே.. நம்ம விதுவை பாடாபடுத்தின அந்தப்
பாவிய நீங்க கொன்னது சரிதான். மொதல்ல தப்பிப்போங்க.. மாமா,
உங்க அக்கா அநியாயமா அலறிண்டிருக்கா... காசிக்குப் போக வேண்
டியவன், ஜெயிலுக்குப் போகப் போறானேன்னு புலம்பிண்டு
இருக்கா?''
தமக்குத் தெரிந்ததையும், புரிந்ததையும் பேசும் அந்த முகங்களை
விழிநீர் ஒழுகப்பார்த்தார்.
''சிவா... தாமதிக்காதே.. விதி உன்னைச்சுத்திக் கொடூரமா வலை
பின்றது. மொதல்ல தப்பியோடு, பிறகு யோசிச்சுக்குவோம்.''
காவிரி ஓரத்தில் அடர்ந்த மாந்தோப்பில் விரவிக்கிடக்கும் சருகு
கள் சருகோடு சருகாகச் சாய்ந்தார் சிவப்பிரகாசம். இதெல்லாம் என்ன?
மேற்கொண்டு என்ன செய்யலாம்?
சிலை வேறு மடுநீரில் மாட்டிக் கொண்டிருக்கிறதே!
ஒரு கொலைகாரனாகப் போய் நின்று கொண்டு, கடத்தல் முயற்சி
யைச் சொன்னா நம்புவார்களா?
கடவுள் சத்தியமா அக்காவைக் காசிக்கு அழைச்சிண்டு போவதா
கச் செய்த சத்தியத்தை இனிக் காப்பாற்றுவதுதான் எப்படி?
எப்படியோ தப்பிவிட்ட அந்த நாலு பேரும் திரும்ப வந்து தொந்த
ரவு செய்தால் ?
வினாவுக்கு மேல் வினா வளர்ந்து அவரை வாட்டியது.
சரணடைந்து விட ஒரு மனம் விரும்பினாலும், மறு மனசு, 'என்ன
தப்பு செய்து விட்டாய்? ஏன் சரணடைகிறாய்?'- என்று கேள்வி கேட்
டது.
'அனுபவிக்க வேண்டிய கொடுமை அத்தனையும் அனுபவித்து
ஆயிற்று. இத்தனைக்குப் பிறகும் குற்றவாளிப் பட்டமா?'
சிந்தனையோடு எழுந்து நடந்தார். பசி தாகம் அத்துணையும்
அறவே நீர்த்துப் போனதுபோல் இருந்தது.
தோப்புக்கு வெளியே பாதைமேட்டிற்கு அப்பால் காவேரி பாய்ந்து
கொண்டிருந்தாள்.



அவளை நெருங்கி இறங்கி இரண்டு வாய் நீர் அள்ளிப்பருகினார்.
வெகு தொலைவில் படித்துறையில் ஊர்மக்கள் சின்னச்சின்னப் புள்
ளிகளாய்த் தெரிந்தனர். மத்திமமாய் மயானம்! அதன் வெளியே
போலீஸ் வேன்! சிவப்பிரகாசத்துக்கு நரம்பை வெட்டியது போலிருந்
தது.
பதுங்கிப் பதுங்கி நெருங்கித்தூர நின்றபோது அவர்களின் பாதுகா
வலோடு வித்யா எரியத் தொடங்கினாள். ரங்கா மயங்கி ஒரு பெண்
மேல் விழுந்திருந்தாள்.
''வித்யா..வித்யா...''- உதடு ஓயாமல் உச்சரிக்க ஒரு பைத்தியம்
போல் சிரித்து, பிறகு அழுது, அதற்குப்பிறகு அசாத்திய மௌனமாகி
அந்த தீ நாக்குகளையே பார்த்துக் கொண்டு..
''மயானத்துக்கு எப்படியும் வருவார்''- என்று எதிர்பார்த்துப் பல
போலீஸ்காரர்கள் பார்வை மயானத்தைச் சுற்றிச்சுற்றிச்சுழன்றும் அதில்
சிவப்பிரகாசம் சிக்காமல் போனதில் ஏதோ பொருள் இருக்கவே செய்
தது, என்னவாக இருக்கும்?
''சாமி, உங்க கதை அரிச்சந்திரன் கதையை விட உருக்கமா இருக்கு.
இத்தனைக்கும் மேல இன்னமும் நீங்க அகப்படாம இருக்கிறது ஒரு
பெரிய ஆச்சரியமா இருக்கு. கோடிக்கணக்குல திருடினவங்களையெல்
லாம் நிமிஷத்துல நம்ம போலீஸ் பிடிச்சுடுது. நீங்க சிக்காததுக்கு அந்
தசாமி தான் காரணம். ஏதோ அதிசயமாக நடக்கப்போகுது சாமி. கவ
லைப்படாதீங்க.. நான் என்ன செய்யணும்?''
கந்தசாமி ஆர்வத்தோடு அவர் கதையைக் கேட்டுவிட்டுக் கேட்
டான்.
''என் ரங்காவைக் காசிக்கு. அழைச்சிண்டு நான் போய் வரணும்.
அதுக்கு நீ உபகாரம் பண்ணனும்.''
''போய் வந்தபிறகு என்ன பண்ணுவீங்க?''
''வந்தாத்தானே...''
''வராம?''
'' அதெல்லாம் உனக்கெதுக்கு? செய்வியா?''
''இது ஒங்க சொந்த விசயம். நடராஜர் சம்மந்தமா ஓர் உதவி கேட்
டீங்களே என்ன அது?''
''மடுவுக்குள்ள அந்த மூர்த்தி விக்கிரகம் இருக்கற உண்மையை
நான் போலீசுக்குத் தெரியப்படுத்தியாச்சு. அத இப்போ வெளிய எடுத்
திருக்கலாம். வெளிய எடுத்தது முக்கியமில்லே! இனிமே பத்திரமா
அதைப் பாதுகாக்கறது ரொம்ப முக்கியம். தர்மகர்த்தாவைப் பார்த்து
நடந்த விபரங்களை விளக்கமாகச் சொல்லி, நல்ல பந்தோபஸ்துக்கு
ஏற்பாடு செய்யச் சொல்லணும். சொல்லுவியா?''
''... ... ... ...''
''உன்னால் முடியாதா? இதெல்லாம் விவகாரமான வேலைன்னு
பயப்படறியா? அப்படீன்னா''...
''சாமி, சாமி'' கந்தசாமி கத்தியே விட்டான். பின்,
''எனக்கு நீங்க செய்த உதவிக்கு ஏற்ற நன்றி உபகாரம் செய்யக்

கிடைச்சுருக்கிற சந்தர்ப்பம் இது. விடமாட்டேன் சாமி! கவலைப்ப
டாதீங்க, நீங்க என் வீட்லயே தங்குங்க, மற்றதைப் பிறகு யோசிச்சு
செய்வோம்.''
அந்தப் பழைய வீட்டின் வாசலில் முல்லைக்கொடி வாடி வதங்
கிக் கிடந்தது. அந்த வீட்டின் அமைதியும், மகிழ்ச்சியும் தவழ்ந்த நாளி
ளெல்லாம் அது தழைத்துப் பொசிந்து கிடந்தது. அதைப் பார்த்து தெரு
வில் போவோர் வருவோர் கூட வியந்தது உண்டு.
ரங்காவும், வித்யாவும் மாறி மாறி நீர் ஊற்றி வளர்த்த அந்தக்
கொடிக்கு இன்று யாரும் இல்லை. ரங்காவுக்கே இன்னொருவர் வந்
துத் தண்ணீரைக் கூட எடுத்துத் தர வேண்டிய நிலை. உயிர் விழியில்
தயாராக எப்பொழுதும் விலகி விடுவேன் என்பது போல் இருக்க உயிர்
மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தாள் ரங்கா.
திண்ணைப்புறம் மப்டியில் பேர்லீஸ்காரர் ஒருவர் உட்கார்ந்திருந்
தார். சிவப்பிரகாசத்தின் கடிதத்தைப் பார்த்துவிட்டு அனுப்பிய பாது
காப்புக்காக மட்டுமின்றி, சிவப்பிரகாசம் தம் அருமைச் சகோதரியைப்
பார்க்க வந்தால் பிடிக்க வசதியாக இருக்கும் என்னும் போலீசாரின்
ஏற்பாட்டில் நாளது வரையில் ஒரு பலனும் இல்லை.
தெருவையே வெறிச்சுப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் போலீஸ்
காரரைத் தாண்டிக் கொண்டு உள்ளே போனான் கந்தசாமி.
''யாருப்பா நீ''
''இவங்களுக்குத் தெரிஞ்சவன்...''
''தெரிஞ்சவன்னா?''
''பழக்கமுங்க...பாத்துட்டுப் போக வந்தேன்.''
''அப்படியா... உன் பேரு அட்ரஸை இந்த நோட்டுல எழுதிப்பிட்டு
உள்ளே போ.''
''எதுக்கு இதெல்லாம்?''
''எங்க வசதிக்கு, நாங்க சொல்றதைக் செய். உனக்கெதுக்கு வேண்
டாத கேள்வியெல்லாம்?''
கந்தசாமி எச்சரிக்கையாக ஒரு போலி அட்ரஸை எழுதி விட்டு
உள்ளே போனான்.
''அம்மா...''
-அழைப்பொலி கேட்டு திரும்பினாள் ரங்கா.
யாரென்றே தெரியாத முகம்.
''உங்க தம்பி அனுப்பி வந்திருக்கேன்.'' மிக மிக மெல்லச் சொன்ன
அவன் சொல், அவள் செவியில் உயிர் ஒலியாய் பிரவேசித்தது. முகம்
மலர அவனைப் பார்த்தாள்.
''சாமி இப்ப நல்லபடியா என்கூடப் பழமுதிர்சோலையில் இருக்
காரு. அவர் ஒரு தப்பும் பண்ணலேம்மா. எல்லாம் விதி. ஒரு குற்றவா
ளியா சரணடைய அவர் விரும்பலே, அதோட ஜெயிலுக்குள்ள
இருந்தா சில கடமைகளைச் செய்ய முடியாதுன்னு அவர் நெனைக்கி
றாரு. உங்களைச் காசிக்கு அழைச்சுப் போறேன்னு சத்யம் பண்ணிக்
கொடுத்திருக்காராமே?''



போலீஸ்காரர் இப்பொழுது அவர்களை நெருங்கி வந்து நிற்க ஆரம்
பித்தார். பேச்சைத் திசை திருப்பினான் கந்தசாமி.
''கஷ்டம் கவலைன்னு இப்படி உடம்பைக் கெடுத்துக்கிட்டீங்
களே..''
''மொதல்ல அவர அந்தாண்ட போகச் சொல்லு.'' தனது அத்தனை
நாள் எதிர்ப்பார்ப்பின் தடையாக வந்த போலீஸ்காரரைப் பார்த்து அந்
தப் பலவீனத்திலும் கத்தினாள்.
அவரும் வேண்டாத வெறுப்பாக அகல, திரும்பவும் பேசினான்
கந்தசாமி.
''உங்களைக் காசிக்குக் கூட்டிப் போக சாமி இப்பத்தயாராக இருக்
காரு. நீங்க தயாரா?''
''அதெல்லாம் விடு தம்பி. நான் காசிக்குப் போறது எனக்கு முக்ய
மில்லை. அவன் சிக்கல் தீரணும். ஒண்ணுக்கு ரெண்டு பிரச்சனை
அவனை அமுக்கறது. அதுக்கு வழியப் பார்கணும் . 'எனக்கு அவன்
இருக்கற இடந்தான் காசி.
அவன் குடிக்கற தண்ணிதான் கங்கை' அவனுக்காகத் தான் நான்
காசிக்குப் போகணும்னே ஆசைப்பட்டேன். ஆனா இப்படி அவன்
கொலைகாரனாயிட்டானே?''
''அம்மா... அவர் கொலைகாரர் இல்லை. காக்கா உட்காரப் பணம்
பழம் விழுந்த கதைம்மா அந்தச் சம்பவம்...''
''புரியும்படி சொல்லேள்.''
''அவகாசமில்லை. அது சம்பந்தமா ஒரு வேலை பாக்கி இருக்கு.
முடிச்சிட்டு வந்துடறேன். கொஞ்சம் பொறுங்க.''
கந்தசாமி சொல்லிக்கொண்டு வெளியே வந்தான். இப்பொழுது
அவன் கால்கள் கோதண்டராமன் வீட்டைக் குறிவைத்திருந்தன. அவ
னைக் கூட அவனுக்கே தெரியாதபடி ஒருவர் குறி வைத்திருந்தார்.
கோதண்டராமன் தாடியும் மீசையுமாக ஐயப்ப சாமியாக தென்பட்
டார். கந்தசாமிக்கு அந்தக் கோலம் ஒரு வசதியான கோலமாகத் தென்
பட்டது. வந்த விபரத்தைக் கூறி, சிவப்பிரகாசம் பெயரையும் சொன்ன
உடனேயே லேசாக நடுங்க ஆரம்பித்துவிட்டது கோதண்டராமனின்
தேகம்.
''ஐயா வளவளன்னு நான் பேச விரும்பலே, நான் மொரட்டு
ஆளு... கொலைக் குற்றத்துக்குப் பயந்தவன் இல்லை. மலைக்கு நீங்க
மாலை போட்டு இருக்கிறதனால பேசாம இருக்கேன். மனசுல
கைவெச்சு அந்த ஐயப்ப சாமி சத்யமா சொல்லுங்க. சாமியா உங்க மக
னைக் கொன்னாரு''
''... ... ...''
''சொல்லுங்கய்யா... எப்ப செஞ்ச பாவமோ? உங்க பிள்ளை இருந்
தும் இல்லாமப் போயிட்டான். இப்பவும் பாவம் செஞ்சு தலைமுறை
தலைமுறைக்குப் பழிதேடி, நாசமாப் போகாதீங்க... தான் ஒரு
கொலையாளியா? பாவியான்னு நெனைச்சு அங்கே அவரு காசிக்குப்
போனாத் தீருமா... கங்கையில மூழ்கினா அடங்குமான்னு அலைமோ

திக்கிட்டிருக்கார் அவர் பொண்ணு வாழற நாள்ள தான் அவரை உயி
ரோட வெச்சு உரிச்சீங்க. அது செத்தபிறகும் அவரைப் போட்டு மிதிக்
கிறீங்களே... நியாயமா? நீங்க மாலை போட்டு மலை ஏறிட்டா உங்
களை அந்த ஐயப்பன் மன்னிச்சிடு வாரா?''
''என்னை என்ன பண்ணச் சொல்றே?'' கோதண்ட ராமன் பணி
வாக, இலகுவாகக் கேட்டவிதம் அவனுக்கு நம்பிக்கைத் தந்தது.
''போலீஸ்ல நீங்க கொடுத்த வாக்கு மூலத்துல, அவரால உங்க மகன்
சாகலேன்னு அடிச்சுச் சொல்லணும்.''
''சொன்னா அவரை விட்டுடுவாங்களா?''
''அது முக்கியமில்லை. அவர் கொலைகாரர் இல்லேன்னு ருசுவா
கணும். அதுதான் முக்கியம்...''
கோதண்டராமனிடம் பயந்த மௌனம் தோன்றியது. அவர்
மனைவி விதிர்ப்போடு அவரைப் பார்த்தாள்.
''சரி சொல்றேன். இவ்வளவு உண்மை தெரிஞ்ச நீ யாரு...''
''ஒரு நன்றியுள்ள மனுஷன். அந்த நல்லவரால சோறுதிங்கற, ஒரு
கற்பூரம் விக்கிறவன்.''
-கந்தசாமிக்கு வந்த காரியம் எளிதில் முடிந்ததில் உள்ளூற மகிழ்ச்சி
பெருக்கெடுத்தது. அழுத்தமாக எல்லாமே தெய்வ சங்கல்பம் என்று
கருதினான்.
'அடுத்து தர்ம கர்த்தாவைச் சந்திக்கவேண்டும். சிலை கிடைக்
குமா?'- கேள்விப் பந்து மனத்தில் துள்ளிய சமயம் சுற்றிவளைத்த
போலீஸ் ஜீப்பும், இன்ஸ்பெக்டர் சாந்தாராமும் அவனுக்கு அதிர்ச்சி
யைத் தந்தனர்.
பழமுதிர்ச் சோலையிலிருந்து மதுரையை நோக்கின கறுத்த பாதை
மேல் விரையும் போலீஸ் ஜீப்பில் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தார்
சிவப்பிரகாசம்.
காசிக்குப் போய்க் கங்கையோடு கங்கையாக் கரைந்து விடலாம்
என்ற நினைப்பின் மேல் விழுந்த அடியைத்தான் அவரால் தாங்க முடி
யவில்லை.
முன்புறம் அமர்ந்திருந்த இன்ஸ்பெக்டர் சரவணன் தான் ஒரு குற்ற
வாளியைப் பிடித்ததாகவே நினைக்கவில்லை. கந்தசாமியை வளைத்த
பிறகு, அவன் கூறிய அத்தனையையும் கேட்ட பிறகு சிவப்பிரகாசத்
தின் மேல் ஒரு தனி மரியாதையே ஏற்பட்டு விட்டிருந்தது; வாழ்க்கை
யில் விதி, கடவுள் நம்பிக்கை, போன்ற விஷயங்களிலெல்லாம் நம்
பிக்கையற்ற அவர் முதல் தடவையாக அவற்றைப்பற்றிச் சற்றுப் பயத்
தோடு சிந்தித்தார்.
ஸ்டேஷனில் அவரைச் சுற்றி ஊரே கூடிவிட்டது. பலர் வதங்கி விட்
டிருந்த அவரைப் பார்த்து அயர்ந்து போயினர்.
''இவரைப் பாக்கையில எனக்குக் கடவுள் நம்பிக்கையே போயி
டும் போல இருக்கு. யாருக்கு இவர் என்ன கெடுதலைச்செஞ்சார்?
இப்படிக் காலம் அலைக்கழிச்சிடுச்சே..?''
''நடந்ததை விடுங்க. இனி நடக்கறதாவ்து நல்லபடியா நடக்கட்
டும். போலீஸ்காரய்யா அவரு ரொம்ப தங்கமானவரு.''
சிவப்பிரகாசமோ வெறித்து விட்டிருந்தார். இப்படி வந்து மாட்டிக்
கொண்டு விட்டோமே... இதன் பின் விளைவில் ரங்கா பாதிக்கப்பட்
டால்? அந்தக் கொலைக்காரர்கள் எதற்கும் துணிந்தவர்கள் ஆயிற்றே!?
சரவணன் தெம்பாகப் பேசினார்.
''என்கொயரியில எதையும் மறைக்காம சொல்லுங்க. உங்க அக்கா
வுக்கு ஒரு ஆபத்தும் வராது. அதுக்கு நாங்க பொறுப்பு''-திரும்பவும்
சோர்ந்தவரின் செவியோரம், ரங்காவுக்கு அவர் செய்து தந்த சத்தியம்
வந்து அலை மோதியது.
''உன்னை எப்படியும் காசிக்கு அனுப்பி விஸ்வநாதரைத் தரிசனம்
பண்ண வெக்கிறேன். கவலைப்படாதக்கா. இதச் செய்யாமல உன்
தம்பி சாகமாட்டான் போறுமா?...''
செய்த ஈஸ்வர சத்தியத்தையே சுற்றிச் சுழன்றது.
'அதைக் காப்பாற்ற இயலுமா? தமக்கு அந்தப் பாக்கியம் கிடைக்
குமா'- மனத்தைக் கேள்வி, ஏகாண்ட ரூபமெடுத்துக் கிழிக்க தான் மடு
விற்குள் எறிந்த விக்கிரகம் அகப்படாத கவலை வேறு அவரைச் சுக்
கல் சுக்கலாக உடைத்துக் கொண்டிருந்தது.
''சாமி, உங்களை ஜாமீனில எடுக்க ஏற்பாடு நடந்துகிட்டிருக்கு.
கவலைப்படாதீங்க!'' கந்தசாமி உற்சாகமாக வந்து சொன்னான்.
வெளியே ஒரு புறம் மடுவைச் சுற்றிலும் காவேரியில் விக்கிரத்தைத்
தேடும் பணியில் தீவிரமாகவே போலீஸார் ஈடுபட்டிருந்தனர்.
சிவப்பிரகாசம் எதிரே கைவசமுள்ள குற்றவாளிகளின் புகைப்படங்
களைக் காட்டி, கடத்த முயன்ற நான்கு பேரினை அறியும் முயற்சி ஒரு
பக்கம்.
இத்தனைக்கும் நடுவில் சிவராத்திரிக்கு ஒரு பகல் பொழுதே இருந்
தது. சிவராத்திரியில் கோயில் பிரகார மண்டபத்தில் அந்த நடன நட
ராஜமூர்த்தி மல்லிகைப் பந்தலுக்கு கீழே நின்று விடிய விடிய அருள்
பாலிப்பதும், விசேஷ பூஜைகளை ஏற்பதும் ஆயிரம் காலமாக நடத்து
வரும் அற்புத விஷயமாயிற்றே!
இந்த முறை அது தப்பிப் போய் விடுமோ?
போய்விடுமோ என்ன? போய்விட்டது! -சிவப்பிரகாசம் எனும் பக்
திப்பழம் வெம்பி வெடித்து விட்டது.
சிவராத்திரிக்கு முந்தின மாலைப் பொழுது பக்கத்து ஊர் கோயில்
யானை திருமஞ்சனா நீர் எடுக்க வந்திருந்தது.சங்கராபுரம் வீதிகளில்
அதன் ஒய்யார நடை தூள் பறந்தது.
சாம்பு சாஸ்திரிகளும், தர்மகர்த்தாவும் அதைப்பின் தொடரக் காவே
ரிக்குச் செல்லும் பாதையில் கோயில் முரசைக் கொட்டி முழக்கிக்
கொண்டு நாணா நடந்து கொண்டிருந்தான்.
சிவப்பிரகாசத்தை அழைத்தபோது, '' அந்த நடராஜன் இல்லாத
கோயிலுக்கு நான் வரமாட்டேன்... அவன் கிடைக்கட்டும். கிடைப்
பானா?'' என்றெல்லாம் கேட்டுத் துளைத்து விட்டார்.
அவர் உடம்பும் மனமும் இருந்த கோலம் எல்லாரையுமே கலக்கிவிட்

டது.

''கவலைப்படாதே சிவா, நடராஜ மூர்த்தி விக்ரகம் கிடைச்சுடும். மலை மாதிரி வந்த துன்பமெல்லாம் விலக ஆரம்பிச்சுடுத்தேடா, இது தானா பெரிய விஷயம்? கிடைச்சுடும்டா, கிடைச்சுடும்டா.'' தேற்றினாள் ரங்கா.

''கிடைக்கவேன்னா?''

''அக்கா என்னைத் திருடன்பாளே... நான் சொன்னது பொய்யாயிடுமே..

அப்புறம் நீயோ நானோ காசிக்குப் போக முடியாது. நம்ம பாவம் தீராது.'' பைத்தியம் போல அவர் உளற உளற அடிவயிற்றில் அக்கினி பரவியது ரங்காவிற்கு.

''காசியாம், பெரிய காசி. நான் சொல்றேண்டா இந்த நடராஜர் தான் காசி விஸ்வநாதர். இந்தக் காவேரி தான் கங்கை. அங்க போக முடியலைன்னா போயிட்டுப் போறது! எனக்கு கவலை இல்லை. சத்யம் வாங்கிண்ட நானே சொல்கிறேன். நீ கவலைப்படாதே. உன் மாதிரி சத்யதர்மத்துக்குப் பயப்படறவா இருக்கற இடமெல்லாம் காசிடா. தொடற நீரெல்லாம் கங்கைடா.''

ரங்கா குறிப்பிட்ட கங்கைக்குச் சமமான காவேரியில் கோவில் யானை இறங்கியிருந்தது.

படித்துறையில் பலர் குளித்தவண்ணம் இருந்ததால் தெளிந்த சுத்தமான நீருக்காக யானை மடுவுக்குச் கொஞ்சம் தள்ளியுள்ள ஆழமான இடத்தில் வெள்ளிக் குடத்தால் நீரை மொண்டார் சாம்பு சாஸ்திரிகள். வேத உச்சாடனங்களை உடன் வந்திருக்கும் குழுவினர் தீர்க்கமாக உச்சரிக்க மேற்கில் விழுந்த சூரியனின் பொன்கதிர் ஓடும் காவேரியையே தங்க நதியாக்கி விட்டிருந்தது.

திடுமென்று யானை சிலிர்ப்பிக்கொண்டு பாகனை மீறி ஆற்றில் இறங்கி முழங்கால் நனைய நின்றது. நீருக்குள் மூழ்கிய துதிக்கையால் நீரை உறிஞ்சி உறிஞ்சித் தன்மேல் விட்டுக்கொண்டது.

இது இயல்பான விஷயந்தான்.

பாகன் அங்குசத்தால் கால்களைத் தொட்டு அதன் பாஷையில் ஏதோ கோபத்தோடு பேசினான்.

பிளிறிக் கொண்டு யானை நீரினின்றும் தும்பிக்கையை உயர்த்திய போது அதன் பிடியில் தங்கநிகர்ச் சூரியனின் பொன் கதிர் பட்டு நடராஜ மூர்த்தி ஜொலித்தார்.

''ஜெய ஜெய சங்கர!... ஹர ஹர சங்கர!'' அதைப் பார்த்ததும் கூட்டம் உற்சாகப் பெருக்கெடுத்துப் பரவசத்தோடு முழங்கியது.

''ஜெய ஜெய சங்கர!... ஹர ஹர சங்கர!'' நாலாபுறமும் எதிரொலித்தது. அந்த மந்திரச் சொல், 'நாணா' ஒரு விநாடியைக் கூட வீணாக்காமல் முரசைக் கழற்றி வைத்துவிட்டுச் சிவப்பிரகாசத்தைப் பார்க்க ஓடினான்.

வந்த வேகத்தில் வீட்டு வாசற்படியிலேயே ஸ்தம்பித்து விட்டான்.

ஒரு பாக்கியத்துக்குரிய புனித மரணம் அவனை நிலைகுலைய வைத்து விட்டது.

உயிரற்ற சிவப்பிரகாசத்தின் தலைமாட்டில் ஓர் அகல் விளக்கை ஏற்றி வைத்துவிட்டுக் கால்மாட்டில் விழுந்து கிடந்தாள் ரங்கா.

முற்றும்